# விமானத்தில்ஏறிய எல்லைக்காந்திகண்கலங்கினார்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
[வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 1
இதழ்: 361
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப்பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் தை 27 துல்ஹஜ் 2 திங்கட்கிழமை [9-2-70]


## 4 மாதங்களின் பின் திரும்பிப்போகிறார்

புதுடில்லி, பெப் 8
எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் தமது நான்கு மாத சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு இன்று காபூலுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் பிரமுகர்களும், நண்பர்களும் உறவினர்களும் அவரை உருக்கமாக வழியனுப்பி வைத்தனர்.

புதுடில்லி மேயர், பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி, அவரது சகாக்கள் திரு ஷேக் அப்துல்லா மற்றும் பாட்சாக்கானின் உறவினர்கள் முதலியோர் விமான நிலையத்தில் அவரை வழியனுப்ப வந்திருந்தனர்.

கையால் நெய்யப்பட்ட எளிமையான கதரினால் ஆன பட்டாணியரின் உடையை கான் அப்துல் கபார்கான் அணிந்திருந்தார்.

விமானநிலையத்தில் பாட்சாக்கான் மிகவும் குதூகலமாகக் காணப்பட்டார். ஆனால் விமானத்தில் ஏறி கைகளை ஆட்டி விடைபெற்றுக் கொண்ட பொழுது அவரது கண்கள் கலங்கிப் போய் இருந்தன.

முன்னதாக அவரை வழியனுப்ப வந்தவர்கள் அளித்த மலர் மாலைகளையும் மலர் வளையங்களையும் அவர் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டார்.

### பிரியாவிடை செய்தி

எல்லைக்காந்தி ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிப் போவதையொட்டி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர்பின்வருமாறுகூறினார்.

இந்திய மக்களையும் பாகிஸ்தான் மக்களையும் ஒற்றுமைப் படுத்துவது குறித்து அவர் கூறியதாவது- "இந்த உலகில் எதுவுமே முடியாத காரியம் அல்ல: மக்கள் வன்முறையையும் வெறுப்புணர்ச்சியையும் கைவிட்டார்களானால், இது சாத்தியமானகாரியந்தான் இந்தத் துணைக் கண்டத்தை இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளாகப் பிரிவினை செய்வதற்கு இந்த வன்முறையும் வெறுப்புணர்ச்சியுமே காரணம். இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரு சமஷ்டியாகவோ அல்லது கூட்டுசமஷ்டியாகவோ சேர்ப்பது சூழ்நிலைகளையும் மக்களுடைய முயற்சிகளை பொறுத்தது".

(3-ம் பக்கமும் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

## காலால் உதைத்தபின் கத்தியால் குத்தினார்

### கொலைமுயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்
"நான் சயிக்கிலில் சென்று கொண்டிருந்த போது முன்னால் வந்த எதிரி யாரடா நீ நிறுத்து என்றுகூறினார் நான் ஒன்றும் பேசவில்லை. என் கன்னத்தில் அடித்தார். பக்கத்தில் நின்றவர் எதிரியை பிடித்து இழுத்து சென்ற போது அவர்என்னை காலால் உதைத்தார் நான் கீழே விழுந்து விட்டேன். எழும்பும் போது எதிரி கத்தியினால் வயிற்றில் ஒரு தடவை குத்தினார்

வட்டுக்கோட்டை கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த செல்லத்துரை சிவராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நீதியரசர் சி ஜி வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வட்டுக்கோட்டையில் 69-ம் ஆண்டு ஏப்ரல் 10-ம் தேதி சிவசுப்பிரமணியம் தவராசா என்பவர் செல்லத்துரை சிவராமலிங்கம்என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஜெகசோதி, புறக்டர் ஆர். ஜெ. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் வி. எஸ். ஆனந்தன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சரத் சில்வா ஆஜரானார்.

சிவராமலிங்கம் தொடர்

வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவர் அவர் என் சொந்தக்காரர் சம்பவம் நடந்த சமயம் எங்களுக்குள் அவ்வளவு தொடர்பில்லை. குடும்பத் தகராறு காரணமாகத் தொடர்பில்லாமல் இருந்தோம். சம்பவம் நடந்த தினம் ஒரு சயிக்கிலில் சென்றேன். மாமி வீட்டிற்கு நான் சென்று கொண்டிருந்தேன். என் முன்னால் இருவர் சயிக்கிலில் வந்து கொண்டிருந்தனர். முன்னால் வந்தவரைக்கண்டு கொண்டேன். அவர் தான் எதிரி தவராஜா என் சயிக்கிலில் வெளிச்சம் இருந்தது. எதிரியை நேக்கி அவர்கள் வந்ததால் நான் ஒருபக்கமாகசென்றேன்.

எதிரி என்னை குத்தியபின் அவரை இருவர் இழுத்துச் சென்றனர். நான், வந்த பக்கமாகச் சென்றேன், சொர்ணம்மா வீட்டிற்குச் சென்றேன் தவராசா கத்தியால் குத்திவிட்டதாக சொர்ணம்மாவிடம் சொன்னேன் அவர் எனக்கு பஞ்சு தந்தார். நவம் என்பவரின் சயிக்கிளில் மூளாய் ஆஸ்பத்திரிக்குச்சென்றேன். அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.

சொர்ணம்மா சாட்சியமளித்தபோது, காயமடைந்தவரையும் எதிரியையும் தெரியுமென்றும், சம்பவம் நடந்த தினம் காயமடைந்தவர் வீற்டிற்கு வந்ததாகவும் அவருக்குப் பஞ்சு கொடுத்ததாகவும் கூறினார்.

கிளிநொச்சியில் சிங்களபாடசாலை

# "இனஒற்றுமையை சிதைக்க கல்வி அமைச்சர் முயல்கிறார்"

## கிளிநொச்சி எம். பி. பிரதமருக்கு தந்தி

யாழ்ப்பாணம், திங்கள்
"கிளிநொச்சித் தொகுதியில் புதிய சிங்கள பாடசாலையை நிர்மாணிப்பதற்கு முன்னர் இப்பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நீண்ட காலமாக இருந்துவரும் குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் பின்னர் சிங்களப் பாடசாலையை இங்கு அமைக்கலாம். தமிழ் பாடசாலைகளிலுள்ள அத்தியாவசிய குறைகளை நீக்காமல் இவ் கப்படவிருப்பதை கிளிநொச்சி எம் பி வன்மையாகக் கண்டித்துள்ளார்.

திரு இரத்தினம் எம் பி இதுசம்பந்தமாக கல்வி அமைச்சர் திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லைக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட தந்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

"பத்துக்கும் குறைவான சிங்கள மாணவர்கள் உள்ள கிளிநொச்சித் தொகுதியில், பெருந்தொகையான செலவில் புதிய சிங்களப் பாடசாலையை அமைக்க எடுத்த

ராணுவத்தினர்பற்றி

## புகார் வந்தால்தான் நடவடிக்கை எடுக்கலாம்

### ஐ. ஜி. பி. கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு
"ராணுவத்தினர் தாக்கினால் அதுபற்றி பொதுமக்கள் புகார் செய்தால்தான் பொலிசார் நடவடிக்கை எடுக்கமுடியும்" என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலரிக்அபய குணவர்த்தன பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் கூறினார்

மன்னாரில் ராணுவத்தினர் பொதுமக்களைத்தாக்கியதாக வெளியான செய்திகள்பற்றி இன்று நிருபர்கள் கேட்ட நிலைமையில் நாம் என்ன செய்யலாம்? என்று ஐ ஜி. பி நிருபர்களிடம் கேட்டார்.

(சி. பி. ஏ.)

— —

யாழ். மாநகரசபை

### மராமத்து தலைவர்

யாழ்ப்பாணம், திங்கள்
நேற்று மாலை யாழ்ப்பாணம் மாநகரசபை மராமத்து குழுக்கூட்டம் நடைபெற்றது. ஐவைப் எம். ஏ.

கடலிற் சடலம்

### அடையாளம் காணபட்டது

ஊரைதீவு, ஞாயிறு
நேற்று முன்தினம் குறிகாட்டுவான் நெடுந்தீவு கடலில்கண்டெடுக்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகம்வள்ளிப்பிள்ளை என்பவரே இவ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

றில் கூறினூர்

மன்னூரில் ராணுவத்தினர் பொதுமக்களைத்தாக்கியதாக வெளியான செய்திகள்பற்றி இன்று நிருபர்கள் கேட்ட பொழுது அவர் பதிலளித்தார்

சில சமயங்களில் புகார்கள் வருகின்றன பின்னர் புகார்களை திரும்பப்பெற்றுக் கொண்டுவிடுகிறூர்கள் இந்த

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று மாலை யாழ்ப்பாணம் மாநகரசபை மராமத்து குழுக்கூட்டம் நடைபெற்றது. ஜனுப் எம். ஏ. ஸி. எஸ். ஏ, காதர் இதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆணையாளர் திரு. சுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## கொழும்பு நகரமண்டபத்தில் மதச்சடங்குகள்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு நகரசபை மண்டபத்தில் முதல்தடவையாக பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதச்சடங்குகள் இன்று இடம்பெற்றன உள்ளூராட்சி வாரத்தையொட்டி இந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இன்று மதப்பூசைகள் காலை ஒன்பது மணிக்கு இடம்பெற்றன. கொழும்பு மாநகரசபை ஊழியர்களின் இந்துகலாச்சார சங்கம் இதற்கு ஒழுங்குசெய்தது.

(சி. பி. ஏ.)

## "வாரத்தில் 6 நாள் வேலை கொடுக்கவேண்டும்"

—செனட்டர் நடேசன்

கொழும்பு, ஞாயிறு

தோட்டத் தொழிலாளருக்கு இப்போது வாரத்தில் மூன்று நாள் வேலைதான் கொடுக்கப்படுகிறது சம்பளத்திட்டத்தின்படி வாரத்தில் அவர்களுக்கு 6 நாள் வேலைகொடுக்கப்பட வேண்டும் இதன் எதிரொலியாகத்தான் தோட்டத் தொழிலாளர் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம்செய்தனர்"

செனட்சபையில் இன்று செனட்டர் திரு சு. நடேசன் பேசுகையில் மேற்கண்டவாறு குறுப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தோட்டப்பகுதியில் கொந்தளிப்பான சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளதென்றும், இந்த நிலையைப் போக்குவதற்கு தொழில் அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கூறினூர்.

## சீன உதவியுடன் மின்தறி நிலையம்

கோட்டை, ஞாயிறு

பெருந்த செலவில் மக்கள் சீனக் குடியரசின் உதவியுடன் மின்னேரியாவில் மின்தெறி நெசவு நிலையமொன்று நிறுவப்படவிருக்கிறது. இதற்கான கைச்சாத்து இன்று இலங்கை, சீன அரசுகளுக்கிடையில் கொழும்பில் கைச்சாத்தாகியது.

சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. புங்குடு தீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகம்வள்ளிப்பிள்ளை என்பவரே இவ்விதம் கடலில் மிதந்ததாக விசாரணையில்தெரியவந்துள்ளது.

நாற்பத்தைந்து வயது நிரம்பிய இவர் ஒரு மனநோயாளர்எனக் கூறப்படுகிறது.

## இளைஞர்கள் முன்வர வேண்டும்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உப உணவுப் பொருட்களை பயிரிடுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை வளரச் செய்யலாம். விவசாயத்திற்கென அரசாங்கம் உதவி செய்ய எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கும் வேளையில் வாலிபர்கள் இதில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு உழைக்க முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தரான திரு. பொ. மாணிக்கவாசகர்கெருடாவில் பல நோக்குகூட்டுறவுச் சங்க மண்டபத்தில் விவசாயிகள் பயிற்சி வகுப்பில் கலந்து பேசுகையில் கூறினூர்.

பருத்தித்துறைக் காரியாதிகாரி திரு. எஸ் ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் வகுப்பில் திரு. தவராசவேல், ஆர் டி ஓ திரு தேவசகாயம் மற்றும் பலரும் பேசினர்.

இயந்திர சாதனங்கள், கட்டிடம் ஆகியவற்றை சீன வழங்கும். பொறியியல் நிபுணர்களையும் சீன அரசு அளிக்கும். இங்குள்ள இளைஞர்களுக்கு இத்துறையில் பயிற்சி அளிக்கப்படும்.

பின்னர் சிங்களப் பாடசாலையை இங்கு அமைக்கலாம். தமிழ்ப் பாடசாலைகளிலுள்ள அத்தியாவசிய குறைகளை நீக்காமல் இவ்வித முயற்சியில் கல்வி அமைச்சு ஈடுபடுவது இன ஒற்றுமையைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் ஒன்ருகும்"

கிளிநொச்சி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் 22,000 ரூபா செலவில் சிங்களப் பாடசாலையொன்று நிர்மாணிக்

சிங்கள மாணவர்கள் உள்ள கிளிநொச்சித் தொகுதியில், பெருந்தொகையான செலவில் புதிய சிங்களப் பாடசாலையை அமைக்க எடுத்த முயற்சி தமிழ்மக்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கைகளில் ஒன்ருகும். கிளிநொச்சிப்பட்டினத்தின் அருகிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள மாணவர்களுக்கு இடவசதி செய்துகொடுக்கமுடியும். இதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை கட்டிடமின்றி ஓலைக்கொட்டில்களிலும், மரநிழலிலும் இருந்துபடிக்கும் மாணவரின் கஷ்டத்தைநீக்க செலவிடப்படவேண்டும்,

கல்வி அமைச்சரின் தொகு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிருமிநாசினி முறைப்படி பாவிக்கப்படுகிறதா?

### உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையில் விசாரணை

மாவிட்டபுரம், ஞாயிறு

இலங்கையில் விவசாயத் துறையில் கிருமிநாசினிகளை சுகாதார முறைப்படி பாவிக்கிருர்களா என்பதுபற்றி ஆராய்ந்து இலங்கை அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்பிகக உலக சுகாதார சபைப் பிரதிநிதி டாக்டர் ஆன் கிராமங்கள்தோறும் விவசாயிகளுடன் கலந்துரையாடி வருகிருர்.

விவசாயத்தில் பயிர்களின் நோய்களை அழிப்பதற்காகப் பாவிக்கப்படும் கிருமிநாசினிகளால் இங்கு தற்கொலைகள் அதிகரிப்பதற் குரிய காரணம்பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கும்படி யுனஸ்கோ உலக சுகாதார ஸ்தாபனம் டாக்டர் ஆனிடம் கேட்டுக்டுக் கொண்டுள்ளது.

டாக்டர் ஆன் தற்போது கிராமங்கள்தோறும் சென்று விவசாயிகளுடன் கலந்துரையாடி தோட்டம் விவசாயிகளின் வீடுகள் ஆகியவற்லைப் பார்வையிட்டு வருகிருர். இவர் மாவை கிராமமுன்னேற்றச் சங்க அழைப்பை ஏற்று நேற்று இங்கு விஜயம் செய்து இங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினூர்.

இவ்வைபவத்தில் வடமாகாண சுகாதார அதிகாரி திரு. எஸ். பாலசுப்பிரமணியம், வலிவடக்கு காரியாதிகாரி திரு பி எல் பற்றிக்ஸ், சுகாதார உத்தியோகஸ்தர் திரு கந்தையா, சுகாதாரப் பரிசோதகர் திரு பத்மநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாவிட்டபுரப் பகுதியில் உள்ள விவசாயிகளின் தோட்டங்களுக்கும் இவர் சென்று பார்வையிட்டார்.

மக்கள் வன்முறையையும் வெறுப்புணர்ச்சியையும் கைவிட்டார்களானுல், இது சாத்தியமானகாரியந்தான் இந்தத் துணைக் கண்டத்தை

## வெளிநாட்டு செய்திகள்

பெப்ரவரி 8-

### 'அரசியல் தீர்வே நல்லது'

—நாஸர்

ராணுவத்தீர்வை விட அரசியல் தீர்வின் மூலமே மேற்கு ஆஸியப்பிரச்னைக்கு அமைதித்தீர்வுகாண முடியுமென்று ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர் டெலிவிஷன் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். கெய்ரோவில் அளித்த இந்த பேட்டி இன்று நியூயார்க்கில் ஒலிபரப்பப்பட்டது.

### வியட்நுமில் மேலும் படைகுறைப்பு

சைகோன்

வியட்நுமில் மேலும் அமெரிக்க கடற்படை திருப்பி அழைக்கப்படவுள்ளது. அமெரிக்க ஜனுதிபதி திரு. றிச்சாட் நிக்ஸனின் இந்தத்திட்டத்தை சைகோனிலுள்ள அமெரிக்க கடற்படை அதிகாரி இன்று வெளியிட்டார் ஏப்ரல் மத்தியில் இத்திட்டப்படி 2,800 கடற்படையினர் திரும்பிச் செல்வர்.

### கூட்டு அரசு

புதுடில்லி-

பீஹாரில் சம்யுக்த, பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகள் கூட்டுமுன்னணி ஒன்றை அமைத்து பீகாரில் அரசு ஒன்றை நிறுவ வேண்டுமென பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### ஹூசையினின் வெண்கலச்சிலை

புதுடில்லி-

காலஞ்சென்ற பாரதக் குயரசுத் தலைவர் டாக்டர் சாகீர் ஹுசையினின் மார்பளவு வெண்கலச் சிலை நிறுவும் வைபவபம் ஜனுதிபதி மாளிகையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஜனுதிபதி கிரி பேசுகையில், "ஹுசையின் சான்ருேர் வரிசையில் முன்னணியில் திகழ்ந்தவர். அவரது வாழ்க்கை மக்கள் சமுதாயம் ஊக்கம் அடைவதற்கு பின்பற்றவேண்டிய இந்த வாழ்க்கை அவர் ஒரு அரசியல் மேதை" என்றும் கூறினூர்.

ஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் வி. எஸ். ஆனந்தன் ஆஜரானுர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சரத் சில்வா ஆஜரானுர்.

சிவராமலிங்கம், தொடர்ந்து கூறியதாவது: எதிரியை எனக்குத்தெரியும். அவர் தவரையும் எதிரியையும் தெரியுமென்றும், சம்பவம் நடந்த தினம் காயமடைந்தவர் வீற்டிற்கு வந்ததாகவும் அவருக்குப் பஞ்சு கொடுத்ததாகவும் கூறினூர்

விசாரணை தொடர்ந்து நடைபெறுசிறது

## போலின் குரூஸ் தற்கொலை முயற்சி?

கொழும்பு, ஞாயிறு

போலின் டீ குருஸ் தற்கொலை செய்துகொள்ள முயற்சிசெய்தாராம். மண்ணெண்ணெய் குடித்து தற்கொலைசெய்ய முயற்சிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டதாகத்தெரிகின்றது.

கோதபாயா கிரம்பகந்த என்னும் பாடசாலைச் சிறுவனைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுட் காலத்தண்டனை பெற்று வெலிகடை மறியல்சாலையில் இருந்துவரும் போலின் டீ குறூஸ் நேற்றுமுன்தினம் மண்ணெண்ணெய் குடித்துத் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தாராம்.

மண்ணெண்ணெய் குடித்ததாக அறிந்ததும் சிறைச்சாலை அதிகாரிகள் அவரை உடனடியாகக் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ருர்கள்.

அங்கு போலின் சிறிதளவே மண்ணெண்ணெய் உட்கொண்டதாகக் கூறப்பட்டு வைத்தியர்களால் திருப்பி அனுப்பப்பட்டார்

(சி பி. ஏ.)

### தவறிவிட்டதாம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றுக் காலை கேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனிப்பட்ட வாடகைக் கார் ஒன்றிலிருந்து 'சூட்கேஸ்' பெட்டியொன்று தவறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

### இலங்கைக்கு உதவி பற்றி பாரிசில் மாநாடு

கோட்டைஞாயிறு

இலங்கைக்கு உதவிகள் வழங்குவதுபற்றி ஆராய்வதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளின் மகாநாடு இம் மாதம் 23ம், 24ம் திகதிகளில் பாரிசில் நடைபெறும் இதில் கலந்து கொள்வதற்காக பொருளாதாரத்திட்ட அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி டாக்டர் காமினி கொரியா திரு திஹால்கப்பகொடை திரு டேவிட் லோஸ் ஆகியோர் 20ந்திகதி பாரிசுக்குச் செல்லவிருக்கின்றனர்.

ஜப்பான், அமெரிசகா, பிரிட்டிஷ், பிரான்ஸ், இத்தாலி கனடா, அவுஸ்திரேலியா நியூசிலாந்து ஆகிய அபிவிருத்தியடைந்த நாடுகளே இம் மகாநாட்டில் பங்குபற்றுகின்றன.

வந்துவிட்டன!

வந்துவிட்டன!

நீங்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த

ஜோன்ஸன் கட்டுமர எஞ்ஜின்

உதிரிப்பாகங்கள்.

உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள எம்மிடம் விஜயஞ் செய்யுங்கள்.

விஷ்ணு ஹாட்வெயர்ஸ்ரோஸ்

உரிமையாளர்: அ. சி. விஷ்ணுசுந்தரம் J. P.

57, யாழ்ப்பாணம் வீதி [போன்: 34 தந்தி: 'சிற்றம்பலம்'] வல்வெட்டித்துறை.

## மரண அறிவித்தல்

எஸ்: சிவசுப்பிரமணியம்

கோயிலாக்கண்டி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் (புரக்டர், நொத்தாரிஸ், பகிரங்க வேலைப்பகுதி நிர்வாக உத்தியோகத்தர்) காலமாகிவிட்டார். இவர் புஸ்பகாவல்லியின் அன்புக் கணவரும், ஜெகதீசன் (ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை பொறியியலாளர்), ஜெகநாதன் (தற்போது லண்டனில் பொறியியலாளர்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், தச்சன்தோப்பு புகையிரத நிலைய அதிபர் பொன்னம்பலத்தின் அன்பு தமையனும், டாக்டர் ராஜாப்பிள்ளையின் மைத்துனரும், திருமதி சிவபாக்கியம் கந்தசாமியின் சிறியதகப்பனும் ஆவார். அன்னூரது பூதவுடல் ஈமைக்கிரியைக்காக கோயிலாக்கண்டியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4 மணி அளவில் எடுத்துச் செல்லப்படும்.

1487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 33 ஸ்ரீ இலக்கத் தொடர்புள்ள Austin Goods Van (15 Cwts) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நோர்தேன் இண்டஸ்ட்றீஸ், 8/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1825

### EDUCATION
'D COM'

Diploma in Commerce conducted by Indian Merchant's Chamber, Institute of Book-Keepers, London. London Chamber of Commerce. Details send 75 cents M.O /P.O. to Principal, Sri M. C. College, 38, Seenivasagam Road, Koddady, Jaffna. 1829

### தவறிவிட்டது

ஆனைப்பந்தியடிச் சந்திக்கும், நல்லூர் சந்திக்கும், கச்சேரி-நல்லூர் றேட்டிற்குமிடையில் கம்பளம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், 'ஜேம்ஸ் டீசல் எஞ்ஜினியஸ்'. பண்ணை றேட்டிலிருக்கும் கருச்சிலோ அல்லது ஈழநாடு காரியாலயத்திலோ ஒப்படைத்தால் தகுந்தசன்மானம் வழங்கப்படும். 1831


### சீமெந்து தொழிற்சாலை

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் 31-ந் திகதி முதல் புத்தளத்தில் அமைக்கப்பட்ட சீமெந்துத்தொழிற்சாலை செயற்பட விருக்கிறது. இத்தொழிற்சாலையின் மூலம் இலங்கையில் மேலும் 2 இலட்சத்து இருபதினாயிரம் தொன்எடையுள்ள சீமெந்து பெறவாய்ப்புக்கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### விசாரணைக்குழு யாழ் செல்லும்

கோட்டை, ஞாயிறு

இம் மாதம் 13ம் திகதி தேசிய உயர் கல்விச் சபையின் விசாரணைக்குழு யாழ்ப்பாணம் செல்லுகின்றது. வடக்கிலா அல்லது கிழக்கிலா பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவது என்பது குறித்து விசாரணை நடத்தவே இக்குழு செல்கிறது. யாழ்ப்பாணத்தில் விசாரணைநடத்திய பின்னர் இக்குழு திருகோண


### சுழிபுரம் கிராமசபை விளம்பரம்

சுழிபுரம் கிராமசபையினரால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய சாலைக்கு மருந்துவகைகள் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையிலுள்ள சகல ஆயுள்வேத மருந்து விற்பனையாளர்கள், வைத்தியர்கள் ஆகியோர்களிடம் இருந்து விலாசங்கள் கோரப்படுகின்றன.

சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை. 1943

### வரணிக் கிராமச் சபையின் கேள்வி விளம்பரம்

வரணி வடக்கு தம்பான் வீதிக்கு 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி பிற்பகல் 3 மணிவரை வரணிக் கிராமசபை அக்கிராசனரால் 'சீல்' வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா 25/-ம் போம் பணமாக ரூபா 5/- கட்டியதன் பேரில் 15-2-70-ந் திகதி பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்குக் கேள்வி விளம்பரத்தைப் பார்க்கவும்.

க. முருகேசு,
அக்கிராசனர்,
வரணிக் கிராமச்சபை.
வரணி, 7-2-70. 1944


வேலணையில்

### விவசாயப் பயிற்சி வகுப்பு

அல்லைப்பிட்டி, ஞாயிறு

"நாம் இன்று விவசாயத் துறையில் ஓரளவு முன்னேற்றம் உள்ளவர்களாகவிளங்குவதற்குக்காரணம் இன்றைய அரசாங்கமே. இவ்வரசாங்கம் விவசாயத்தைமுன்னேற்றுவதற்காக அரும்பாடுபட்டு வருகின்றது" எனவேலணைப் பகுதிவிவசாயிகளின் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப்பேசிய யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

வேலணைக்கிராமசபைமண்டபத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் வேலணை கலைமகள் இளைஞர்விவசாயச் சங்கம்வேலணை வளந்தோர் விவசாயிகள் ஆகியோர் பங்குபற்றினர்கள். தீவுப்பகுதி

நாட்டுக்குகிடைத்த சுதந்திரம்

# நல்லமுறையில் பயன்பட வேண்டும்

உடுப்பிட்டி, ஞாயிறு

"எந்தச் சமூகத்தினர் நாட்டை ஆண்டாலும் நாட்டில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டாலே உண்மையான சுதந்திரம் கிடைக்கும். நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது நாட்டு மக்களின் கடமையே ஆகும்."

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியில் கொண்டாடப்பட்ட சுதந்திரதின விழாவில் பேசுகையில் உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார். இமையாணனில் இச்சுதந்திரதின வைபவம் நடைபெற்றது.

உபசபாநாயகர் மேலும் பேசுகையில், "தேசிய அரசாங்கத்தின் முயற்சியினால் சென்ற நான்கு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. இலங்கையில் ஏற்றத்தாழ்வு அற்ற சமூகம் உருவாகி வர அரசாங்கமும் பிரதமரும் ஊக்குவித்து வருகின்றனர்" என்றார்.

உடுப்பிட்டித் தொகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனும் பேசினர். விளையாட்டுப் போட்டிகளைப் பொறுப்பேற்று நடாத்தியமைக்காக உடுப்பிட்டி வட்டார விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கே. கார்த்திகேசுவிற்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

### நெடுந்தீவில்

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் சுதந்திரதின விழா கொண்டாடப்பட்டது. காலை 8 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர் அணிவகுப்புக்குப் பின் நெடுந்தீவு காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். விழா நாள் முழுவதும் நடைபெற்றது. குதிரை ஓட்டம், அலைமோதும் கடலில் நடைபெற்ற நீச்சல் போட்டி, சயிக்கிள் ஓட்டம் ஆகியன மிகவும் விறுவிறுப்பாக இருந்தன. போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விபரம் வருமாறு:

3 மைல் ஓட்டம்: வி நடராசா, மு தர்மகுணசிங்கம், ம வென்சிஸ்லாஸ்.

5 மைல் ஓட்டம்: ப கயிலாயநாதன், த டேவிட்சுந்

பரிசுபெற்றவர்களுக்கு திருமதி வேல்நம்பி பத்திரங்களும் பரிசுகளும் வழங்கினர். நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரியும் விழாச் செயலாளருமான திரு. நா. சு முருகேசு நன்றியுரை தெரிவித்துப்பேசினர்.

மாலை நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி சாதிமதபேதமற்ற முறையில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு பொருளாதார சுதந்திரம் பெற உழைக்கவேண்டுமென வேண்டிக்கொண்டார். மற்றும் திரு. சு. குமாரவேலு ஆசிரியர், மாணவர்களான இ. பாஸ்கரன், மு. சாந்தகுமார், செல்வி எஸ். மேரிறஞ்சினி ஆகியோரும் பேசினர்.

### வேலணையில்

வேலணை, ஞாயிறு

"தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கம் தலைமையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் சுதந்திரதின விழா கொண்டாடப்பட்டது. வடமாநிலக் கல்வி அதிபர் திரு. சி. தணிகாசலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். ராஜ் நகைச்சுவை மன்றத்தாரின் 'சக்கடத்தார்' நாடகம் விழாவில் இடம்பெற்றது. அல்லைப்பிட்டி வாசிகர் சங்கத்தினரின் நாடகமும் மற்றும் நெடுந்தீவு, நயினாதீவைச் சேர்ந்த மாணவிகளின் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழாவையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் பரிசுபெற்றவர்களுக்கு திருமதி தணிகாசலம் பரிசுகளை வழங்கினர். போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு.

மரதன் ஓட்டம்: எஸ். பிரான்சிஸ், சென். ஜேம்ஸ் ச. ச நிலையம், ஊர்காவற்றுறை, ஜே. அருள்நாதன், நசறத் ச. ச. நிலையம், புங்குடுதீவு. கே. பாககியநாதன், அல்லைப்பிட்டி, ச. ச. நிலையம்.

சைக்கிள் ஓட்டம்: க. சைமன், நாரந்தனை, எஸ். செல்வராசா, மகாமாரி ச. ச. நிலையம், புளியங்கூடல். எஸ். வீராப்பு, சூரியவத்தை நாரந்தனை.

# இன்றைய பலன்

தைமாதம் 27-ம் திகதி [9-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** பெரியஇடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம். சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புது வழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

**ரிஷபம்-** ஆணவப்போக்கினால் அடி சறுக்கி நேரிடும். குடும்பத்தில் சிறிய பூசலுக்கும் இடம் ஏற்படலாம். வயதுமுதிர்ந்த ஒரு பெண்மூலம் அவப்பெயருக்கும் இடம் உண்டு சுகாதாரத்தை பேணுவதுடன் அடக்கம் நன்று.

**மிதுனம்-** வாகனசுகத்துடன் வாழ்க்கை நலன் வந்து சேரும். தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

**கடகம்-** அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு.

**சிம்மம்-** தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும். பிணிக்கு இடங்கொடாது உடல் நலத்தை பேணவும் துக்கமான தினம்.

**கன்னி-** இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். பெற்றோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்-** நாள் எல்லாம் அலைச்சல். உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

**விருச்சிகம்-** தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றாடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணை நன்று.

**தனுசு-** உத்தியோக உயர்வுக்கு இடம் உண்டு. சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்புக்கு இடம்உண்டு நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும். செய்கருமத்தில் தெய்வத்தின் துணையும் உண்டு.

**மகரம்-** இரக்கசிந்தை மேலிடும். பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடம் உண்டு.

**கும்பம்-** பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

**மீனம்-** குடும்பக்கவலையுடன் குறுக்குவழி தலையீடு புதிர்போடும். வாழ்க்கையில் சோர்வுக்கு இடம்உண்டு.

"தமிழ்ப் பிள்ளைகளின்

# 2-வது மொழியாக ஆங்கிலமேஇருக்கவேண்டும்

கோப்பாய், ஞாயிறு

"தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் இரண்டாவது பாடமாகக் கற்பிக்கப்படுவதை தமிழரசுக்கட்சி ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழி தமிழாகவும் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலமும் தொடர்ந்திருக்கவேண்டும் எனபதே எமது கட்சியின் கொள்கையாகும். தமிழ்க் குழந்தைகளின் போதனா மொழி விஷயத்தில் தமிழும் சிங்களமும் மாத்திரம் தொடர்ந்து நீடித்திருக்குமானால் எமது

ங்க சேவையிலும் என்றும் பின் தங்கியவர்களாகவே இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகவே தான் தமிழ்ப் பாடசாலைகளில் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றோம்'.

இவ்வாறு கோப்பாய் மாவட்டத் தமிழரசுக் கட்சியின் கருத்தரங்கில் தமிழப் பிள்ளைகளின் போதனா மொழி குறித்து கருத்து தெரிவிக்கையில் வட்டுக்கோட்டை எம். பி. யும், தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

# இன்று கொழும்பில் யாழ். கோஷ்டிமோதும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண பாடசாலையின் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி இன்று கொழும்பு செல்கின்றது. இக் கோஷ்டி கொழும்பில் நடைபெறவிருக்கும், மாகாண பாடசாலைத் தெரிவுக் கோஷ்டிகளுக்கிடையிலான போட்டியில் அங்கு பங்கு கொள்ளும்.

இக் கோஷ்டி நாளை முதலில், நீர்கொழும்பு பாடசாலை தெரிவுக் கோஷ்டியுடனும், பின் சிலாபம் பாடசாலை தெரிவுக் கோஷ்டியுடனும் மோதிக் கொள்ளும்.

யாழ். கோஷ்டிக்கு வீரர் அன்ரன் சந்திரசேகர் காப்டனாகவும், வீரர் மோகனராம் உதவிக் காப்டனாகவும் இருப்பார்கள். கொழும்பு செல்லும் இக் கோஷ்டிக்கு திரு. ஆர். துரைசிங்கம் பொறுப்பாளராக இருப்பார்.

(தே. நி)

# யாழ். மாநகரசபைக்கோஷ்டி இறுதிப்போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் அரைஇறுதி ஆட்டத்தில், யாழ். மாநகர சபைக் கோஷ்டி தபால் கோஷ்டியை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை பல கோல்களைப் போடும் கட்டங்களை தபால் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் நழுவவிட்டதினால், ஈற்றில் இக் கோஷ்டி தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. மாநகரசபைக் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் பலம் கூடுதலாக இருந்தபடியினால் தபால் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் இலகுவில் முன்னேற முடியாதபடி இவர்கள் தடுத்து விட்டனர். இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின் மாநகரசபைக் கோஷ்டிக்கு கிடைத்த "பெனல்டி" ஒன்றை இக் கோஷ்டியினர் பயன் படுத்தாது விட்டு விட்டனர். தபால் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்த போதிலும், மாநகரசபைக் கோஷ்டியின் இடதுகடை வீரர் பத்மசுந்தரம் ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு சில நிமிடங்கள் இருக்கும் போது ஒரு கோலைப் போட்டு (1-0) தபால் கோஷ்டியைத் தோல்வியடையச் செய்தார்.

மாநகரசபைக் கோஷ்டியின் வீரர்களான பி. சிறில், ஏ. இம்மனுவேல் ஆகியோரின் ஆட்டம் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

கடந்த மூன்று வருடங்களாக இந்த 'நொக்கவுட்' போட்டியில் தபால்கோஷ்டி சாம்பியனாகத் திகழ்ந்தது குறிப்பிடத் தக்கது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ரி ராஜேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்.

(தே. நி

தீண்டாமை ஒழிப்பு மாதம

# 6 இடங்களில் தேநீர்க்கடை பிரயோகம் செய்ய முடிவு

மாவிட்டபுரம், ஞாயிறு

தீண்டாமை ஒழிப்புமாதத்தில் 6 உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள கடைகளில் தேநீர் கடைப்பிரவேசம் செய்வதென சிறுபான்மைத் தமிழர் மகாசபை முடிவுசெய்துள்ளது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் செயற்குழுக் கூட்டம் சபையின் தலைவர்

டினசபை, உடுப்பிட்டி, மல்லாகம், புத்தூர் வட்டுக்கோட்டை, தொல்புரம் கிராமசபைகளின் எல்லைக்குள் உள்ள தேநீக்கடைகளில் பிரவேசம் செய்தல் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி மேற்படி மன்றத் தலைவர்களிடம் கோருதல்

சங்கானையில் மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை நடத்தவே இக்குழு செல்கிறது யாழ்ப்பாணத்தில் விசாரணைநடத்திய பின்னர் இக்குழு திருகோணமலைக்குச் சென்று அங்கும் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக விசாரணை செய்ய விருக்கிறது.

கலைமகள் இளைஞர்விவசாயச் சங்கம்வேலணை வளந்தோர் விவசாயிகள் ஆகியோர் பங்குபற்றினர்கள். தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சொ. விநாயகலிங்கம் உட்பட பல விவசாய உத்தியோகஸ்தர்கள் இங்கு பேசினர்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த

# அடிமைப் பெண்

கடைசி 3 தினங்கள்

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

★ சத்தியன் ★ ஷீலா
நடித்த
ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்

## செம்மீன்

(மலையாளம்)

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
12ந் திகதி முதல்

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று "பேசும்படத்தின்" மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்

## சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

# தில்லானா மோகனாம்பாள்

ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்


3 மைல் ஓட்டம்: வி நடராசா, மு தர்மகுணசிங்கம், ம வென்சிஸ்லாஸ்.

5 மைல் ஓட்டம்: ப கயிலாயநாதன், த டேவிட்சுந்தரலிங்கம், எஸ் பங்கராஸ்.

5 மைல் சைக்கிள் ஓட்டம்: எஸ் இராயப்பு, எஸ் எமிலியானுஸ்பிள்ளை.

நீச்சல் போட்டி: எஸ் எமிலியானுஸ்பிள்ளை, எஸ் யாக்கோப்பு, எஸ் இராயப்பு.

குதிரை ஓட்டம்- கு கணேசலிங்கம், வே கீத பொன்கலன்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
ஞாயிற்றுக்கிழமை
காலை 10-30 மெற்னி
தேவ் ஆனந்த் - நந்தா
நடித்த
'டூன் டெவியன்'
[சிறந்தஹிந்திச்சித்திரம்]

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
ஒரிப்போயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்.
நடித்த
குடும்பத் தலைவன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
ஒரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி
நடித்த
பெண்ணின் பெருமை

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ஜெமினி—ஈ.வி.சரோஜா
நடித்த
பாக்கியலக்ஷ்மி
4-00 p.m. Only
HELICOPTER SPIES

Now Showing
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
RIFIFI IN PARIS

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Rory Calhoun &
Lea Massari
in
THE COLOSSUS
OF THE RHODES
(Eastman color-
Cinemascope)


சைமன், நாரந்தனை, எஸ். செல்வராசா. மகாமாரி ச. ச. நிலையம், புளியங்கூடல், எஸ். வீராப்பு, சூரியவத்தை நாரந்தனை.

காரைநகர்த்துறை - ஊர்காவற்றுறைத்துறை நீச்சல் போட்டி: எஸ். அல்போன்ஸ் சென்ஜேம்ஸ் ச. ச. நிலையம், ஊர்காவற்றுறை. ஜே. அருமைநாயகம். அல்லைப்பிட்டி ச, ச. நிலையம், எஸ். சண்முகநாதன், குமரன் ச. ச, நிலையம் பருத்தியடைப்பு.

கயிறுழுத்தல் போட்டி: மத்திமா ச. ச. நிலையம், எழுவைதீவு, சிவலைப்பிட்டி ச. ச. நிலையம். புங்குடுதீவு.

பொலிசாருக்கும் கிராம சேவையாளருக்குமிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான கயிறுழுத்தல் போட்டியில் கிராம சேவையாளர் வெற்றியீட்டினர்.

விநோத உடைப்போட்டி: செல்வி விநிபெரேடா அந்தோனி பெர்னாண்டோ, ஊர்காவற்றுறை, கே. முத்துக்குமாரு. அல்லைப்பிட்டி. எஸ். அன்ரன், ஊர்காவற்றுறை.

போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக திரு. பி. பொன்னுச்சாமி, திரு. ப. பரஞ்சோதி, ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிபர் திரு. இராசையா ஆகியோர் கடமையாற்றினர்.

—— ——

## கொழும்பில் நகர சங்கீர்த்தனம்

கொழும்பு, ஞாயிறு

"வீடுகளிலும் சங்கங்களிலும் இறைவன் நாமத்தை இசைத்து தம்மையும் சூழ்ந்தோரையும் இன்பமடையச் செய்வதுபோல் வீதிகள் தோறும் சென்று இறை நாமம் இசைப்பதன் மூலம் மக்கள் இறை நினைவைத் தட்டி எழுப்புவது உத்தமப் பணி" என்று பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா கூறியதற்கமைய கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ பகவான் சத்திய சாயி பாபா சத் சங்கத்தினர் மாதந்தோறும் அமாவாசை தினத்தில் நகர சங்கீர்த்தனம் செய்து வருகின்றனர். தொடர்ந்து மூன்று மாதத்திற்கொரு முறை தாம்செல்லும் வீதியில் மாற்றஞ்செய்கின்றனர்.

நாவலப்பிட்டி, இரத்தினபுரி, பதுளை, கண்டி போன்ற இடங்களுக்கும் இச்சத்சங்கத்தினர் சென்று அவ்வூர்களில் ஸ்ரீசாயி பாபா சத்சங்கம் நிறுவ பஜனைகள் கூட்டுவழிபாடுகள் செய்து உதவியுள்ளனர்.

எதிர்வரும் 21-ந் திகதி புத்தளத்தில் ஆரம்பிக்கப் படவிருக்கும் சத் சங்கத்தில் கலந்துகொள்ள கொழும்பிலிருந்து ஒரு கோஷ்டியினர் செல்கின்றனர்.

தமிழ்க் குழந்தைகளின் போதனு மொழி விஷயத்தில் தமிழும் சிங்களமும் மாத்திரம் தொடர்ந்து நீடித்திருக்குமானல் எமது சமூகம் கல்வியிலும், அரசா

மொழி குறித்து கருத்து தெரிவிக்கையில் வட்டுக்கோட்டை எம். பி. யும், தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

வடபகுதியை

# கல்விப்பகுதியினர் புறக்கணிக்கிறர்களா?

## கல்விமான்கள் கவலை

கொழும்பு, ஞாயிறு

பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக்கழகமும், கொக்குவிலிலுள்ள தொழில் நுட்பக்கல்லூரியும் கல்விப் பகுதியினரால் புறக்கணிக்கப்பட்டுள்ளனவா?

தமிழ்க் கல்விமான்களிடையே இக்கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது. இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள நுண்கலைக்கல்லூரிகள், கனிஷ்ட பல்கலைக் கழகங்களில் தேவைக்கதிகமான சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும், ஆனல் வடமாகாணத்திலுள்ள இந்த ஸ்தாபனங்களுக்கு அன்றாட பாவிப்புக்கு ஏற்ற சௌகரியங்கள் வெகு குறைவென்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. இதனல் தமிழ் மாணவரின் தரம் பாதிக்கப்படுவதாகவும் இதையிட்டு ஆர்வமுள்ளோர் தகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்றும் கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இத்தகவலை வெளியிட்டவர் முன்பு கல்வி இலாகாவில் உயர் பதவி வகித்த ஒருவராவார்.

## திருவிழா

கோப்பாய், திங்கள்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் வருஷாபிஷேகமும் மணவாளக் கோலத்திருவிழாவும் இன்று நடைபெறவிருக்கிறது.

# திருட்டுக்கள்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணைதெற்கு துறைமுக கடற்கரைப்பகுதியைச் சேர்ந்த திரு. க. பேரம்பலம் என்பவருடையபுதிய சைக்கிள் திருட்டு போய்விட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிசில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த பொன்னையா சம்பந்தன் என்னும் வாலிபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.

வேலணைதெற்கு துறைமுக கடற்கரையில் இப்பகுதி மீனவர்களினல் போடப்படும் விலையுயர்ந்த பல மீன்பிடிவலைகள் இரவோடு இரவாகத் திருட்டுப் போய் விடுகின்றன. இதுசம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. கடந்த சில காலமாக பல மீன்பிடிவலைகள் திருட்டுப்போயும் ஒன்றுமே கண்டு பிடிக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது:

வேலணை தெற்கு துறைமுக கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திலும் திருடர்கள் இரவோடிரவாக உட்புகுந்து உண்டியல் பெட்டியை உடைத்து முழுப்பணத்தையும் திருடிச் சென்று விட்டார்களாம். இதுசம்பந்தமாகவும் ஊர்காவற்றுறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. கடந்தசிலவருடங்களாக வேலணைப்பகுதியில் பல திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

## உடுவில் பகுதி விளையாட்டு விழா

மாவிட்டபுரம், ஞாயிறு

வலி வடக்கு விளையாட்டுக்கழகஉடுவில் பகுதிசமாஜ 5-வது ஆண்டு விளையாட்டு விழா இம்மாதம்10-ம் திகதி ஆரம்பமாகிறது.

சுன்னுகம் பட்டினசபையின் புதிய விளையாட்டரங்கில் ஆரம்பமாகும் இவ்விளையாட்டுவிழாவில் கரபந்தாட்டம், உதை பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மரதன் ஓட்டம் உட்பட மற்றும் பலவிதமான விளையாட்டுக்களும் இடம்பெறவிருக்கின்றன. உடுவில் பகுதி விளையாட்டுக் கழகங்கள், சனசமுக நிலையங்கள் இதில் கலந்து கொள்ளும். இதற்கானஏற்பாடுகளை மேற்படி. சமாஜ செயலாளர் திரு. ஏ. முருகையா கவனித்து வருகிறர்.

சம் செய்வதெனச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை முடிவுசெய்துள்ளது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் செயற்குழுக் கூட்டம் சபையின் தலைவர் திரு. எம் சி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"தீண்டாமைஒழிப்பு மாதத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை பட்ளில் பிரவேசம் செய்தல் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி மேற்படி மன்றத் தலைவர்களிடம் கோருதல்

சங்கானையில் மேற்கொள்ளப்பட்ட தேநீர்க்கடைப் பிரவேசத்துக்கு நன்றி தெரிவித்தல்

தீண்டாமை ஒழிப்பு மாத கால எல்லையைக்கூட்டுதல்"

மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின

0

# பாடசாலைகளுக்கு இலவச நீரிறைக்கும் பம்புகள்

பருத்தித்துறை, ஞாயிறு

விவசாயம் போதிக்கப்படும் அகில இலங்கையிலுமுள்ள பாடசாலைகளுக்கு இலவச தண்ணீர்ப் பம்புகளும் விவசாயத்துக்கான பலவகை ஆயுதங்களும் வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் சுமார் எட்டுப் பாடசாலைகளுக்கும் உத்தேச மாதிரிப் பாடசாலைப் பண்ணையமைக்கப்படவிருக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இம்மாத இறுதிக்குள் இவை வழங்கப்படவிருக்கின்றன.

இப்பாடசாலைகளில் மாணவரின் தோட்டங்கள் பாராட்டப்படக்கூடிய தரத்தையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 9—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: பகல்12-03, 1-00, இரவு 10-00.

இரவு 7-15 பாட்டு, 7-45 நாடகம்-'மன்னிப்பு'. 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல்.

—— ——

## அவதான நிலையம்

கோட்டை, ஞாயிறு

தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் பார்சல்கள் திருட்டுப்போவது அதிகரித்துவருவதை யொட்டி அதைத் தடுப்பதற்காகக் கொழும்பு மக்கலம் வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ள தபாலறையில் அவதான நிலையமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.


"ராதா"

# சக்தி பூஜா அகர் பத்தி

★ ஆலயங்கள்
★ திருமண வைபவங்கள்
★ இன்ப நிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

## ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். — 160, செட்டியார் தெரு. கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கெதிராக கூட்டு நடவடிக்கை?

## அரபுத் தலைவர்கள் ஆலோசனை

கெய்ரோ, பெப். 8

மேற்காசியாவில் இஸ்ரேலுக்கெதிரான தமது நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதற்கான அரபுத் தலைவர்களின் உச்சி மாநாடு நேற்று கெய்ரோவில் ஆரம்பமாகியது.

ஐக்கிய அரபுக் குடியரசு ஜோர்டான் சிரியா ஈராக், சூடான் ஆகிய ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

நேற்றைய கூட்டம் சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்றபின் ஒத்திபோடப்பட்டது. அரபுநாடுகள் இஸ்ரேலுக்கெதிரா எடுக்க வேண்டிய அரசியல், ராணுவ நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, மகாநாட்டில் அரசியல் கமிட்டியொன்றும் ராணுவக்கமிட்டியொன்றும் நிறுவப்பட்டன. அரசு வெளிநாட்டு அமைச்சர்களையும் பாதுகாப்பு அமைச்சர்களையும் கொண்ட இந்தக் கமிட்டிகள் இஸ்ரேலுக்கு எதிராக கிழக்கு, மேற்கு முனைகளில் அரபு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து யோசனைகளைச் சமர்ப்பிக்கும்

சர்வதேச நிலைமைகள் குறித்து இஸ்ரேலுக்கு அமெரிக்கா அழைத்துவரும் ஆயுத உதவிகள் பற்றியும் நேற்று மாநாட்டில் ஆராயப்பட்டதாக அரபுக் குடியரசுவெளிநாட்டமைச்சர் திரு. மகமூத் றியாட் கூறினார். எகிப்து மீதும் இரத அரபு நாடுகள் மீதும் இஸ்ரேல் தொடர்பாக தாக்குதல்கள் நடத்தி வருவது குறித்து நேற்றைய மாநாடு ஆலோசனை நடத்தியதாக அவர் குறிப்பிட்

இதுபற்றி இன்னும் ஒரு பாத காலத்தில்தான் முடிவெடுக்கப் படும் என்று வெள்ளைமாளிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் அமெரிக்கா செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள விரும்பவில்லை உலகின் எப்பகுதியில் அமைதி நிலவ வேண்டும் என்பது தான் அமெரிக்காவின் நோக்கம் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு வில்லியம் ரோஜர்ஸ் கூறியிருக்கிறார் பத்து ஆபிரிக்க நாடுகளில் விஜயம் மேற்கொண்டுள்ள திரு ரோஜயஸ் தற்பொழுது மொரொக்கோவில் இருக்கிறார்.

## விமானத்திற்குள் துப்பாக்கிச்சண்டை

சான்டியாகோ, பெப். 7

கியூபாவுக்கு துப்பாக்கிமுனையில் விமானம் ஒன்று திருப்பி செலுத்தப்பட்ட போது விமானத்தில் மாறுஉடையிலிருந்து இரு பொலிஸ் அதிகாரிகள் விமானத்தைத் திருப்ப முனைந்தவர்களோடு துப்பாக்கிச் சண்டையில் இறங்கி ஒருவரைச் சுட்டுக்கொன்றார்கள். மற்றொருவருக்கு பலத்த காயங்கள் விளைவிக்கப்பட்டன.

பொலிசார் இருவரும் சிறு காயங்களுக்குள்ளானார்கள். ஆனால் விமானப் பணிப்பெண் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உள்ளூர்பிரயாணம்ஒன்றை மேற்கொண்டிருந்த இந்த விமானத்தை 19 வயதும் 20 வயதுமான இருஇளைஞர்கள் துப்பாக்கி முனையில் கியூபாவுக்குத் திருப்பி ஓட்டும்படி விமானியிடம் கட்டளையிட்டனராம். விமானம் சந்தியாகோவில் எரிபொருளுக்காக இறங்கியபோது இரண்டு பொலிஸ்காரர்களும் விமானம் திருத்துபவர்கள் போல் உடைதரித்துக்கொண்டு உள்ளேபுகுந்தார்களாம். விமானத்தில் 70 பிரயாணிகள் இருந்தனர். விமானநிலையத்தில் பெண்கள் இறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர் ஆனால் ஆண்கள் இறங்க விடப்படவில்லை. விமானம் மேலேகிளம்பியதும் துப்பாக்கிச் சண்டை ஆரம்பமாகியது.

## எண்ணெய் கப்பலுக்கு தீயிட்டனர்

## விமானப்போக்குவரத்தை கட்டுப்படுத்து இயந்திரங்கள்

லண்டன், பெப் 8

அடுத்த ஆண்டிலிருந்து பிரிட்டனில் விமானப் போக்குவரத்து மின்கணித (கம்பியூட்டர்) இயந்திரங்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரவிருக்கிறது. 'மீடியேட்டர்' எனப்படும்இந்த நவீன திட்டத்தின் முதலாவது கட்டம் அடுத்த ஆண்டுடன் பூர்த்தியாகிறது. இரண்டரைக் கோடி பவுண்கள் வரை இதற்குச் செலவழிக்கப்படுகிறது.

இப்புதிய திட்டம் தற்போதைய விமானப்போக்குவரத்து முறையை முற்றாக மாற்றியமைக்கும். தற்போதைய முறையின் பிரகாரம் விமானக் கட்டுப்பாட்டு நிபுணர்கள் விமானப் பறப்புகளின் விபரங்களையும் மற்றும் தகவல்களையும் எழுதி, விமான நிலையங்களுக்கு தொலைபேசிமூலம் அறிவித்து வருகிறார்கள். இப்புதிய கம்பியூட்டர் இயக்க முறை அமுலாக்கப்பட்டதும் விமானப் போக்குவரத்தின் சகல தகவல்களையும் இயந்திரங்களே கையாளக் கூடியதாக இருக்கும். ஒரு பொத்தானை அமுக்கினால் போதும். விமானங்கள்எங்கு பறக்கின்றன, எந்த இலக்கை நோக்கிச் செல்கின்றன. அவை சென்றடையும் நேரம், அவற்றின் வேகம் போன்ற தகவல்கள்எல்லாம் டெலிவிஷன் மூலம் விமான நிலையங்களில் பெறக்கூடியதாக இருக்கும்.

உலகிலேயேமிகவும் நவீன முறையாக கொள்ளப்படும் இத்திட்டம் அடுத்த 10 ஆண்டுகள்வரை பிரிட்டனில் அமுலாகிவரும். 1980ம் ஆண்டில் இதன் இரண்டாவது கட்டம் அமுலாகும். அதன்பின்னர் சகல சிவில், ராணுவ விமானங்களும் இப்புதிய கட்டுப்பாட்டு முறையின்கீழ் இயக்கப்படும்.

## தூங்க வைக்கும் அதிசய இயந்திரம்

லண்டன், பெப். 8

மனிதர்களைத் தூங்க வைக்கும் அதாவது மனோவசியப்படுத்தும் அதிசய இயந்திரம் ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரபல பிரிட்டிஷ் மனோதத்துவ நிபுணரான டாக்டர் ஜோன் கிளாக் இந்தஇயந்திரத்தை உருவாக்கியிருக்கியிருக்கிறார்.

இந்த இயந்திரம் மனிததொனியில் பேசும் ஆற்றல் படைத்தது. இந்த இயந்திரத்தினுள் பொருத்தப்பட்டிருக்கும் மின்காந்த நாடா ஒன்று இவ்விதம் மனித பாஷையில் பேசி, நபரை தூக்க மயக்கத்தில் ஆழ்த்தி விடுகிறது. சார்மனைக் கதிரையில் ஆளைப் படுக்கவைத்து இந்துஇயந்திரத்தை முடுக்கிவிட்டால் 15 நிமிடங்களுக்குள் ஆளைத்தூங்க வைத்துவிடும்.

மனோவசிய நிபுணர் ஒருவர் எவ்விதம் ஆளையிட்டு. மனோவசிய தூக்கநிலைக்கு படிப்படியாக கொண்டுசெல்கிறாரோ அதேபோன்று இந்த [illegible] பேசி மயக்கத்தை [illegible] படைத்தது. மனநோய் சிகிச்சைத்துறையில் இந்த இயந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண விஞ்ஞான

# பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்க வேண்டுமாம்

## இந்தியாவை முறியடிக்க புட்டோவின் யோசனை

கராச்சி, பெப். 8

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்க வேண்டும். என்று பழைய பாகிஸ்தான் மந்திரி திரு. புட்டோ வலியுறுத்துகிறார்.

இந்தியா அணுகுண்டு தயாரிக்க ஆரம்பித்து விட்டால் அது பாகிஸ்தானுக்கு பெரிய கஷ்டமாகப் போய் விடும் என்று அவர் கவலை தெரிவித்துள்ளார்.

சேகுபுரா என்ற இடத்தில் அவர் கூட்டமொன்றில் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

''1965-ம் ஆண்டுஇந்தியா பாகிஸ்தான் போர் நடந்த போது, அப்போதைய பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கு நான் சில யோசனைகள் தெரிவித்தேன்.

இந்தியாவில் பம்பாய் அருகே டிராம்பேயில் உள்ள அணுசக்தி நிலையத்தின் மீது குண்டு வீச அனுமதிக்கும்படி அயூப்கானிடம் கேட்டுக் கொண்டேன். கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்கள் மீதும் குண்டு வீசும்படி வற்புறுத்தினேன்.

ஆனால் என்னுடைய இந்த யோசனைகளை ஏற்பதற்கு அயூப்கான் மறுத்து விட்டார்.

நான் கூறியபடி குண்டு வீச்சு நடத்தி இருந்தால் குறைந்த பட்சம் இன்னும் 10 ஆண்டுகளுக்கு அணுகுண்டு தயாரிக்க முடியாத நிலைமை இந்தியாவுக்கு ஏற்பட்டு இருக்கும்.

தற்போதைய நிலைமையில் பாகிஸ்தானும் அணுகுண்டு தயாரிக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு உள்ள ஒரே வழி இதுதான்.

இந்தியாவிடம் முறைப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று எப்போதுமே நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன். இந்தியா அணுகுண்டு தயாரிக்கத் தொடங்கி விட்டால், அது பாகிஸ்தானுக்கு பெரிய பிரச்சினை ஆகிவிடும்.

பெங்களூர் தமிழர்களை

# கன்னடர் தொடர்ந்து தாக்கினால் தமிழ்நாட்டிலும் ஆர்ப்பாட்டம்?

## ம. பொ. சி. எச்சரிக்கை

சென்னை, பெப். 8

பெங்களூரில் தமிழர்களுக்கு எதிராகக் கன்னடர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொடுமைகள் இழைத்துவந்தால் தமிழ் நாட்டிலும் அம்மாதிரி ஆர்ப்பாட்டங்களைத் தமிழர்கள் நடத்தக்கூடுமென்று அஞ்சப்படுகிறது.

இதுசம்பந்தமாகத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் செயல்கள் நீடித்தால் விபரீத விளைவுகள் ஏற்படுமென்று ம. பொ. சி கூறியிருக்கிறார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் பேசுகையில் கூறியதாவது:

''கன்னடர்கள் இன உணர்ச்சியோடும், மொழி வெறியோடும் மைசூர் மாநிலத்தில் உள்ள தமிழர்களைத் தாக்கிவருகிறார்கள். றேன். அதனால்தான் சும்மா இருக்கிறேன்.

கன்னடர்களின் வன்முறைச் செயல்கள் பற்றி எனக்குப் பல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதில் தமிழர்கள் வீடு கொளுத்தப்படுகின்றன என்றும், பெண்கள் கொடுமைப்படுத்தப் படுகின்றார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கொடுமையைக் கேட்டு ஒவ்வொரு தமிழனின் இரத்தமும் கொதிக்கிறது.

இந்த வன்முறை நீடித்தால் தமிழர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். இதனால் பயங்கர விளைவுகள் ஏற்படுமென்று எச்சரிக்க விரும்புகிறேன்.

தமிழர்கள் தாக்கப்பட்டதற்குக் கன்னடர்கள்மீது மைசூர் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும்

மத்திய அரசு இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டும். சிண்டிகேட் தலைவர் நிஜலிங்கப்பா தமிழ்ப்பகுதிகளுக்குச் சென்று ஆறுதல் கூறி அறிக்கை விடவேண்டும்.

நிலைமையை நேரில் கண்டறியத் தமிழக அரசு ஒரு தூதுக்குழுவை மைசூருக்கு அனுப்பவேண்டும்

இந்தப் பிரச்சினை பற்றித் தமிழக அரசு மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.'

# மைசூர் முதல்வர்

மீதும் இரத அரபு நாடுகள் மீதும் இஸ்ரேல் தொடர்பாக தாக்குதல்கள் நடத்தி வருவது குறித்து நேற்றைய மாநாடு ஆலோசனை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

**வெள்ளைமாளிகை அறிக்கை**

இஸ்ரேலுக்கு நூறு விமானங்களைக் கொடுப்பதற்கு அமெரிக்கா முடிவுசெய்திருப்பதாக அமெரிக்க பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை அறிக்கையொன்று மறுத்திருக்கின்றது. இஸ்ரேல் விமானங்கள் கோரியிருப்பது பற்றி அமெரிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

## எண்ணெய் கப்பலுக்கு தீயிட்டனர்

ஒட்டாவா, பெப். 8

கனேடியகரையில் ஒதுங்கிய லைபீரியாவுக்குச் சொந்தமான ஒரு எண்ணெய்க் கப்பல் ஒன்று எரிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக எண்ணெய் வடிந்து மூன்று மைல் நீளத்துக்கும் 100 யார் அகலத்துக்கும் அசுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கப்பலுக்கு உரிமையான கம்பெனியார் இக்கப்பலை தீயிட்டுக் கொளுத்தினர்.

## விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்சங்கத்தின் 10-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாத்க தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எம். பரமானந்தன். உபதலைவர்: கே. குணரத்தினம்; எம். சிவபாலராசா; எஸ். பன்னீர்ச்செல்வம் காரியதரிசி: எம். பத்மநாதன்; எஸ். சிவராசா. தனாதிகாரி: ஸி. எஸ். சுப்பிரமணியம்; வி. இரகுநாதமுதலியார் எஸ். திருச்சிற்றம்பலம்.

யிட்டு. மனோவசிய தூக்கநிலைக்கு படிப்படியாக கொண்டுசெல்கிறாரோ அதேபோன்று இந்த இயந்திரமும் மனிதனொலியில் பேசி மயக்கத்தை உண்டுபண்ணும் அபார சக்தி படைத்தது. மனநோய் சிகிச்சைத்துறையில் இந்த இயந்திரம் பயனளிக்கும் சாதனமாக விளங்குமென டாக்டர் கிளாக் கூறினார்.

''கன்னடர்கள் இன உணர்ச்சியோடும், மொழி வெறியோடும் மைசூர் மாநிலத்தில் உள்ள தமிழர்களைத் தாக்கிவடுகிறார்கள். இதையெல்லாம் கண்டித்து என்னால் போராட்டம் நடத்தமுடியும்.

இன்றுகூடச் சென்னையில் உள்ள கன்னட அலுவலகத்தின் முன்னால் மறியல் நடத்தலாம். நமது தமிழக அரசு அதற்கான நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்குமென எண்ணுகின்

# மைசூர் முதல்வர் பாட்டீல் கண்டனம்

பெங்களூர், பெப். 8

கன்னடர்கள் தமிழர்கள மீது நடத்திவரும் வெளித் தாக்குதல்கள் குறித்து மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திரபாட்டீல் கண்டனம் தெரிவித்திருக்கிறார். அவாவிடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கன்னடம் பேசாத ஒருவரை அந்நியர் என்றுவெறுக்கும் அளவுக்கு உணர்ச்சிகள் தூண்டிவிடப்பட்டிருக்கும் சோகமான கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

எம். எஸ். சுப்புலட்சுமி பாடுகிற பந்தல்மீது கல் வீசுகின்ற அளவுக்கு வெறிவளர்திருக்கிறது. இந்தவெறியில் தியாகராஜ சுவாமிகள்கூட அந்நியராகிவிட்டார்.

தமிழர், தெலுங்கர் ஆகிய அண்டைமாநிலத்து மக்கள் ஒற்றுமையைப் பேண வேண்டும். பழைய வரலாற்றின்படி, தமிழும் கன்னடமும் முதலில் ஒன்றாகவே இருந்தன. பின்னரே பிரிந்தன. எனினும் இரண்டுக்கும் உள்ள பண்பாடுகள் முற்றிலும் ஒன்றானவை.

கன்னடத்தை வளர்க்கிறோம்என்றபெயரில் வெறித்தனம் மேலோங்கக்கூடாது.

நமது சமுதாயப், மத சார்பற்ற சமுதாயம் இங்கே சிலர் நிதானத்தை இழந்துவிட்டது வருந்தத்தக்கது. தமிழர்கள் நமது உற்றார் உறவினர்கள். சகோதரர்களை போன்றவர்கள். அவர்களை நாம்தாக்கலாமா? அவர்களோடு சண்டைபோடலாமா?

திராவிட இலக்கிய உலகில் கன்னடமும் தமிழும் நெருங்கியதொடர்பு கொண்டவை. கன்னட மக்கள் தங்கள் வரலாற்றுப் பின்னணியை நினைவுபடுத்தி அமைதியாக இருக்கவேண்டும்.

# எல்லைக் காந்தி கபார்கான் காபூல் புறப்படுகிறார்

புதுடில்லி பெப் 8

காந்தி நூற்றாண்டுகொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக பாரதம் வந்த எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் இன்றயதினம் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குப் புறப்பட்டுப் போகவிருக்கிறார்.

கான் அப்துல் கபார்கான் பாரதத்தின்பல்வேறுபகுதிகளிலும் சுற்றுப்பிரயாணங்கள் செய்து காந்தியத் தத்துவங்களை எடுத்துக் கூறிய பின்னர் காபுக் புறப்படவிருக்கிறார். நான்கு மாதங்கள் பாரதத்தில் இருந்த பின்னனர் அவர் திரும்பிப் போகிறார்.

காந்திஜி உயிரோடு இருந்த காலத்தில் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே பல வழிகளிலும் பின்பற்றிய கான் அப்துல் கபார்கான் பட்டாணியர்களின் விடுதலைக்காகப் போராடி எல்லைக் காந்தி என்று பெயர் பெற்றிருந்தார். பட்டாணியருக்கு சுயநிர்ணய உரிமை கோரி போராடியதற்காக முதலில்பிரிட்டிஷ்காரர்களாலும் பின்னர் பாகிஸ்தான் அரசாலும் சிறைவைத்து கொடுமைப் படுத்தப் பட்டார். வாழ்க்கையின் பெரும் பகுதியை சிறையிலேயே கழித்துவிட்ட கபார்கான் இப்பொழுது ஆப்கானிஸ்தானைப் புகலிடமாகக் கொண்டு அங்கு வாழ்ந்து வருகிறார்.

காந்திநூற்றாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காகபார்கான் வந்த பொழுது இரண்டு உடைகளை மாத்திரம் ஒரு பொட்டலமாகக் கட்டி எடுத்துவந்தார் வந்த மறுதினமே இந்தியாவில் நடைபெறும் வன்முறைகளைக் கண்டித்து மூன்று நாள் உண்ணாவிரதம் மேற் கொண்டார் பின்னர் நாடுமுழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து காந்தியக்கொள்கைகளை இந்தியர்களுக்கு மீண்டும் எடுத்தியம்பினார்.

காந்தி தின போதனைகளை இந்தியாகள் மறந்து விட்டதைப் பார்த்து அவர் பல இடங்களிலும் மனம் உடைந்து கவலைதெரிவித்தார். இனத்தின் பேராலும் ஜாதியின் பேராலும்நடைபெறும் கொடுமைகளை அவர்கண்டித்தார் சில இடங்களில் அவருக்கா ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உயர்ரக படுக்கைகளை வெறுத்து தரையில் படுத்துறங்கினார் தமது உடைகளைத்தானே துவைத்து உடுத்திக் கொண்டார்

# "கந்தபுராணவாரம் கொண்டாடுக"

கேப்பாய், ஞாயிறு

இம்மாதம் 12-ந் திகதி முதல் 18-ந் திகதி வரையுள்ள வாரத்தை கந்தபுராண வாரமாக கொண்டாடுமாறு நாவலர் கந்தபுராணசபை சைவ ஆலயங்கள், சமய தாபனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றைக் கேட்டுளளது. இதனையொட்டி சைவபரிபாலன சபையினரின் ஆதரவில் வண்ணை நாவலர் ஆச்சிரமத்தில் சொற்பொழிவுகள, குருபூசை கந்தபுராணநூற்காட்சி, பத்திரிகைச் சிறப்பிதழ் வெளியீடு, ஊர்வலம், புராண படனம் ஆதியன நடைபெறவுள்ளன,

மேற்படி நாவலர் கந்தபுராண சபையின் நிர்வாக உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, தலைவர்: திரு. வை. இரகுநாத முதலியார், உபதலைவர்கள: சைவப்புலவர் வ. கந்தசாமி, திரு. சண்முககுமரேசன், பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம், செயலாளர்: வித்துவான் க. கணபதிப்பிள்ளை, பொருளாளர்: திரு. அ. பஞ்சாட்சரம்.

நால்வர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

# 'உலக விஞ்ஞானிகள் சம்மேளனத்தின் புதிய தலைவர்

பெர்லின், பெப் 8

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் நடைபெற்ற விஞ்ஞானிகளின் உலக சம்மேளனச் சபையின் 32-வது கூட்டத்தில் லண்டன் ரோயல் சங்கத்தின் உறுப்பினரும், லண்டன் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீடத்தின் அதிபதியுமான பேராசிரியர் ஈ. எச். எஸ். பர்ஹொப் சபையின் தற்காலிகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சபையின் தலைவரான நோபல் பரிசுபெற்ற விஞ்ஞான பேராசிரியர் சி எப். பவல் அண்மையில் காலமானார்.

இந்தக் கூட்டத்தில் உத்தேச ஐரோப்பியப் பாதுகாப்பு மகாநாடு பற்றியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தகைய ஒரு மகாநாடு ஐரோப்பாவில் அணுஆயுத சூன்யப் பிரதேசமொன்று உருவாகுவதற்கு வழிவகுக்குமென்றும், நேட்டோ ஒப்பந்த நாடுகளுக்கும் வார்ஸா ஒப்பந்த நாடுகளுக்கு மிடையேயுள்ள தேசிய எல்லைகள் சமாதான எல்லைகளாக மாற்றுவதற்கு இம்மகாநாடு உதவுமென்றும் தீர்மானம் வலியுறுத்துகிறது.

விஷக்கிருமி, இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும் குவித்துவைத்திருப்பதையும் தடுக்கக்கூடிய வழியைக் காட்டிக் கொடுப்பதின் மூலம் இந்த மகாநாட்டைவெற்றிபெறச் செய்வதற்கு முயற்சிசெய்யும்படி உலக விஞ்ஞானிகளை இக்கூட்டம் கேட்டுக்கொண்டது.

## 'சத்தியம்' வெளியீடு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சர்வோதய அரசியல் முன்னணி இயக்கத்தின் வெளியீடாகிய 'சத்தியம்' என்ற சஞ்சிகை சென்ற வாரம் வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இயக்க நிர்வாகிகள் வெளியீட்டு வைத்தனர்.

# 110 வயதில் காலமானார்

நயினாதீவு, ஞாயிறு

நயினாதீவு 4ம் வட்டாரத்தில் 110 வருடங்கள் வரை வாழ்ந்த முத்தன் இராமசாமிப்பிள்ளை என்ற மூதாட்டி காலமானார். இவருக்கு பேரப்பிள்ளைகளும் பூட்டர்களுமாக 170 பேர் இருக்கிறார்கள். சாகும் வரை இவர் தனது சகல காரியங்களையும் சுயமாகவே செய்யக்கூடியவராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

(கொழும்பு நிரு.)

அரசாங்கத்துக்கு

## ரூபா 188,000 நஷ்டம்

கோட்டை, சனி

கல்வியமைச்சினால் பாடசாலைக்கென அச்சிடப்பட்ட 9-ம் தர ஆங்கிலப்பாடப் புத்தகங்கள்100,000 அழிக்கப்பட்டதால்ரூபா 188,000 அரசாங்கத்துக்கு நஷ்டமேற்பட்டுள்ளதாக திறைசேரி அறிவித்துள்ளது.

இந்நஷ்டத்துக்குக் காரணமாகவிருந்தவர்களிடம் இப்பணத்தைப் பெறுமாறு கல்வியமைச்சு திறைசேரிக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது பொருளடக்கம், இலக்கணம் முதலியவற்றிலுள்ள குறைபாடுகளாலேயே மேற்படி புத்தகங்களை கல்வியமைச்சு கட்டாயமாக அழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இப்பிழைகள் யாவற்றையும் சுட்டிக்காட்டி ஆசிரியர்கள் கல்வியமைச்சருக்கு புகார் தெரிவித்தனர்.

இப்புத்தகங்களை அழித்தமையால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சமீபத்தில வெளியிட்ட புதிய புத்தகத்தின் மூலம் நிவர்த்திசெய்யலாம் என்ற கல்வியமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளின் ஆலோசனையைகல்வியமைச்சர் மறுத்துள்ளார்.

## அமைச்சரைச் சந்தித்தனர்

உடுப்பிட்டி, ஞாயிறு

வடபகுதியிலுள்ள தமிழ் சிங்கள பௌத்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையை நேரில் சந்தித்து தமிழ் பௌத்தர்களின்நிலைபற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தினர். அகில இலங்கைத் தமிழ்பௌத்த சங்கத்தின் போஷகர் திரு பீ. ஏச் டி. சொய்சா தலைமையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் வடபகுதிப் பௌத்த பாடசாலைகளின் நியமனம் பெறாத ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள் எம். வைரமுத்து, க. இராசரத்தினப்வா. ஆழ்வாப்பிள்ளை ச. தருமன், மு இரத்தினம், சி நவரத்தினம், க சின்னத்தம்பி, திருமதி நா. சிவம் முதலியோர் கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ்ப் பௌத்த பாடசாலை சார்பில் கலந்து கொண்டார்கள்,

இதுவரையும் வடபகுதியிலுள்ள அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பௌத்த பாடசாலைகளில் நியமனம் பெறாது கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும்நிரந்தரசேவையில்சேர்க்கவேண்டுமென்றும் பூநகரிப் பௌத்த பாடசாலையை விரைவில் அரசாங்கம் பாரமெடுக்க வேண்டுமென்றும் வடபகுதியில் உள்ள ஐந்து பௌத்த பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டிடம் வேண்டுமென்றும்வடபகுதித்தமிழ்ப் பௌத்தர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களில் விசேட சலுகைகாட்டவேண்டுமென்றும் ஒவ்வொரு தமிழ்ப் பௌத்த பாடசாலைகள் உள்ள இடத்திலும் விகாரைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் அமைச்சரை இவர்கள் கேட்டுக் கொண்டனர். இக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாகத் தூதுக்குழுவினரிடம் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

# 'சிறுபான்மை சகோதரருக்கு சமத்துவம் அளிப்போம்'

— வி. என்.

கைதடி, ஞாயிறு

''இளம் தமிழர்களின் உள்ளங்களில் மொழிப்பற்று பண்பாடு, கலை, கலாச்சார உணர்வு ஆகியவற்றைப் பதியவைப்பது அரசியல் தலைவர்களல்ல தமிழ் ஆசிரியர்களின் கடமையாகும்'' இவ்வாறு கைதடி மத்தி குமாரத்திபிட்டியில் நடந்த 'இளம் தமிழர்' அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சுதந்திரதினமாகிய இன்றைய நாளில் தமிழர்களாகிய நாம் சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று கூறிவிட முடியாது. ஆனால் சுதந்திரத்திற்காக நமது கட்சி போராடிக்கொண்டே இருக்கும். அயர்லாந்து மக்கள் சுதந்திரத்திற்காக 300 ஆண்டுகள் போராடினார்கள் என்றால் நமது போராட்டம் எத்தனை . வருடங்ளாகும் என்பதை திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது.

நமது சுதந்திரப்போராட்டம் விரைவிலே வெற்றியளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இன்று நாம் 'இளம் தமிழர்' மன்றங்களை அமைக்க வேண்டி இருக்கிறது.

அரசாங்கம் எங்கள் மத்தியில் வாழும்சிறுபான்மைச் சகோதரர்களுக்கு சமத்துவம் என்னும் போர்வையில் சுமது மதம், பாஷை, கலை போன்றவற்றை ஊட்ட முனைகிறது. முன்னோடியாக பௌத்த சிங்களப் பாடசாலை அமைத்துக் கொடுக்கிறது. இந்நிலை வளரவிடாமல் நாம் தடுக்க வேண்டும்.

தமிழுக்காக எம்முடன் ஒன்றுபட்டுழைத்தநம் சிறுபான்மைத் தமிழ்சகோதரர்களுக்கு நாம் சமத்துவமளிக்கவேண்டும்'.

## வயோதிபமாதிடம் வழிப்பறி

பருத்தித்துறை, ஞாயிறு

கொடிகாமம் சந்தைக்கு வியாபார நோக்கமாக ரூபா 150 கொண்டு அதிகாலை 4 மணியளவிற்சென்ற ஒரு வயோதிப மாதிடம் இனந்தெரியாத நபர்கள் பணத்தைப் பறித்ததுடன் அவரைத்தாக்கி மூர்ச்சிக்கப் பண்ணிய சம்பவம் சனிக்கிழமை கரவெட்டிப் பகுதியில் நடைபெற்றதாம். இது விடயமாகப் பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஏழைகள் செய்யும் கூலிவேலையை ஆண்டவனுக்கென்று நாம் செய்தோமானால் அதைவிடச் சிறந்த பூஜை வேறில்லை. —மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 27-ந் திகதி (9-2-70)

## மேற்கு ஆசிய நெருக்கடி

மேற்கு ஆசியாவில் மீண்டும் பெரிய நெருக்கடி யேற்பட்டிருக்கிறது. 1967-ம் ஆண்டுஜூன் மாதம் நடந்த ஆறுநாள் யுத்தத்தின்பின் இப்போது மீண்டும் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில்பெரிய அளவில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரபு நாடுகளின்மீது நடத்தும் தாக்குதல்களைத் தாங்கள் நிறுத்தப்போவதில்லையென்று இஸ்ரேலியர் தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதல்களுக்கு அரபுநாடுகளும் பதிலடி கொடுத்து வருகின்றன, இரு தரப்பிலும் சேதம் ஏற்பட்டுள்ளது. கப்பல்கள் பல மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அரபு நாடுகள் அடுத்துஎடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பதற்கு ஆலோசனை செய்து வருகின்றன. யுத்தம்தான் ஒரேவழி என்று அரபு நாடுகள் கருதுகின்றன. அரபு நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் இருப்பது உண்மையே. ஆயினும் இன்றைய நிலையில் அவைகள் ஒன்றுசேர்ந்துஒரு வழிகாணவேண்டிய கட்டத்துக்கு வந்துள்ளன.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கப்போவதாக அமெரிக்க அதிபர் அறிவித்திருக்கிறார். அரபு நாடுகள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை நிறுத்தாவிட்டால் மேற்கு ஆசியப் பிரச்னையில் தாம் நேரடியாகத் தலையிட வேண்டியேற்படும் என்று சோவியத் யூனியன் தெரிவித்திருக்கிறது, அரபு நாடுகளில் ஒன்றான லிபியாவுக்கு பிரான்ஸ் ஆயுதம் வழங்கத் தீர்மானித்திருக்கிறது. மேற்காசிய நிலைமை பற்றி நேரில் ஆராய்ந்து வருவதற்குச் சென்ற பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் உபதலைவர் திரு ஜோர்ஜ் பிரவுண் தமது விஜயத்தைப் பயனற்றுப்போகச் செய்துவிட்டு திரும்பியிருக்கிறார். மேற்கு ஆசியப் பிரச்னை சம்பந்தமாக சோவியத் பிரத

தற்காக அமெரிக்கா, சோவியத் யூனியன் பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நான்குவல்லரசுகளின் பிரதிநிதிகளும் நியூயோர்க்கில் மீண்டும்கூடி ஆலோசனை செய்திருக்கின்றனர். இந்த ஆலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்தான் இந்த வல்லரசுகள் வழங்கிய ஆயுதங்களைக் கொண்டு இஸ்ரேலியரும் அராபியரும் சண்டையிட்டிருக்கின்றனர். சண்டைக்கு வழிவகுத்துத் தூண்டி விட்டுக்கொண்டு அதே சமயம் சமாதானத்துக்கும் வல்லரசுகள் வழிவகுப்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

வல்லரசுகள் கூடித்தீர்மானிக்கும் எந்தத்திட்டத்தையும் இஸ்ரேலியரும் அராபியரும் ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகம். ஒரு தரப்பினர் ஏற்றுக்கொண்டால் மறுதரப்பினர் நிராகரிக்கலாம். இருதரப்பினருமே அதை நிராகரிக்கலாம். உலக அரங்காகிய ஐ. நா. ஸ்தாபனம் மூலம் ஒரு வழிகாணமுடியாத ஒரு திட்டத்திற்கு ஒப்புக்கொள்ள முடியாத வல்லரசுகள் தாங்கள் கூடிப்பேச ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து மேற்காசியப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமானால், ஐ. நா. ஸ்தாபனத்தின் நிலை என்ன? 1967-ம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேல் பிடித்த அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர் வெளியேற வேண்டும் என்ற நியாயமானகோரிக்கையை ஐ. நா.வின் தீர்மானத்தை இஸ்ரேலியர் நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்றச் செய்வதற்கு வல்லரசுகளுக்கும் ஐ. நா.வுக்கும் சக்தியில்லை என்றால் மேற்காசியாவில் யுத்தத்தை நிறுத்தி சமரசத்தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கை ஏற்பட இடம் உண்டா?

## சுதந்திர தினத்தை யொட்டி

# இதரஜனநாயக நாடுகள்போல இங்கும்விருதுகள்வழங்க வேண்டும்

**- ஐ. இராமசாமி -**

உலக நாடுகள் சுதந்திர தின, குடியரசுத் தினங்களை கொண்டாடும் பொழுது அறிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞான மேதைகள், அரசியல் விற்பன்னர்கள், முப்படை வீரர்கள் ஆகியோரில் தலைசிறந்து விளங்குவோர்க்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கின்றன. விழாக்களில் பெருந்தொகையாக மக்கள் கூடுகிறார்கள். அங்கே ஒருசில தலைசிறந்தோரே பாராட்டுகளைப் பெறுகிறார்கள். மற்றையோரும் தாங்களும் இப்படியான விருதுகளை ஏன் பெற முடியாதென ஆவல் மேலிட்டவர்களாக இல்லம் திரும்புகிறார்கள். மனித வளர்ச்சியில் இது ஒரு நல்ல முன்னேற்றப்பாதையை வழிவகுக்கிறது. இவ்வித முறை இலங்கையைப் பொறுத்த மட்டில் இல்லாமல் இருந்து வருகிறது.

உலகின் பெரும் ஜனநாயக நாடுகளான பாரதமும், ஐக்கிய அமெரிக்காவும் குடியரசுத் தினங்களைக் கொண்டாடும்பொழுது பல துறைகளிலும் சிறந்துவிளங்குவோர்க்குப் பல வீர விருதுகளைக் குடியரசுத் தலைவர்கள் மூலம் வழங்கிவருவதைப் பார்க்கிறோம். பாரதம் குடியரசுத் தினங்களில் 'பத்மஸ்ரீ', 'பத்மவிபூஷண' 'பாரதரத்தின' முதலிய கௌரவ விருதுகளைக் குடியரசுத் தலைவர் மூலம் அறிஞர்கள், கலைஞர்கள், காவல் துறையினர், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், பாதுகாப்புப்படை வீரர்கள் முதலியோரில் தலைசிறந்தவர்களுக்கு வழங்கிவருகின்றது. இதனால் அந்நாட்டு மக்களிடையே ஒரு பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகிறது, முன்னேற்றத்தில்.

இலங்கையிலும் அந்நியர் ஆட்சிக்காலத்திலும், சுதந்திரத்திரம் பெற்ற பின்னரும் சில வருடங்கள் இப்படியான வீர விருதுகள் வழங்கும் முறை கையாளப்பட்டுவந்தது. இப்பொழுது இவ்வழக்கம் அடியோடு மறைந்துவிட்டது. எமது நாட்டில் சேர் பொன். இராமநாதன், சேர் பாரன் ஜெயதிலகா, சேர் பொன். அருணாசலம், சேர் ஜோன் கொத்தலாவல போன்ற பலதரப்பட்ட தலைவர்களை முன்னைய ஆட்சியாளரால் வீர விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது இன்னும் பல தலைவர்கள் இப்படிக் கௌரவிக்கப்பட்டார்கள் அவர்கள் வழிவந்த தலைவர்கள்,

வீர விருதுகள்பெற இப்பொழுது நம் நாட்டில் எவரும் இல்லையா? ஒரு நல்ல அரசுக்கு அணிகலன் அறிஞர்கள், வீரர்கள் முதலியோர்க்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதே யாகும். எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் புதிதகே அமையும் அரசு சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்பொழுது தலைசிறந்தோரைக் கௌரவித்து வீர விருதுகள் வழங்குமென எதிர்பார்க்கிறோம்.

# "அடையாள அட்டை மசோதா அமுலுக்கு வரவில்லையே"

## வேலணையில் திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

வேலணை, ஞாயிறு 'அடையாள அட்டை மசோதா அமுலுக்கு வராதிருக்கும்போது அடையாள அட்டை மசோதாவினால் தான் மன்னாரில் அசம்பாவிதங்கள் நடைபெறுவதாக திரு வ நவரத்தினம் எம் பி கூறுவது எப்படிச் சரியாகும்?'

இவ்வாறு வேலணையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் வட்டுக்கோட்டை எம் பியும் தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியதரிசியுமான திரு அ அமிர்தலிங்கம் பேசுகையில் கேட்டார். வேலணைக் கிராமசபை முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசியதாவது:

'மன்னாரில் நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கெல்லாம் அடையாள அட்டை மசோதாதான் காரணமென்று திரு நவரத்தினம் கூறுகிறார், அடையாள அட்டை மசோதா அமுலுக்கு வராதிருக்கும்போது அவர் இப்படிக் கூறுவது ஒரு தவறான பிரசாரமாகும். தமிழினத்திற்குப் பாதகமான விதியை நீக்க வேண்டுமென்று நாம் தீர்மானித்து, பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் இது பற்றி வாதித்து அந்த விதியை நீக்க வேண்டுமென்று பிரதமரைக் கேட்டு பிரதமரும் எமது கோரிக்கைக்கு ஒப்புக் கொண்ட பின்னர்தான் நாம் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தோம். இதுபற்றித் தீர்மானமெடுப்பதற்கான ளுமாறு திரு நவரத்தினத்தை நாம் அழைத்தபோதெல்லாம் அவற்றில் அவர் கலந்து கொள்ள மறுத்துவிட்டார். பின்னர் கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ளுமாறு அவருக்கு நாம் எழுதியபோதிலும் அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். இதன்மூலம் கட்சியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டின்கீழ் திரு நவரத்தினத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் பேசுகையில், 'தமிழுக்காகச் சிறைசென்றோம். சத்தியாக்கிரகத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோம். ஆனால் எமது ஆதரவின்றி அரசாங்கம் ஆட்சி நடத்த முடியாமற் போய்விட்டது' என்றார்.

திரு கா பொ இரத்தினம் பேசுகையில் ஒரு

# செயற்கரிய செய்த செல்வன்



தைமாதம் 9-ம்திகதி ...ஆம்; இலங்கை மக்களின் பெருமதிப்பிற்குரிய சேர். பொன். அருணாசலம் துரை

# செய்திச் சுருக்கம்

### ஜெர்மன் அன்பளிப்பு

விளையாட்டு உபகரணங்களை இலங்கையில் உள்ள ஜெர்மன் சமஷ்டி குடியரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இவ்வன்பளிப்பு குப்பியாவத்தைவை.எம்.ஏ.இயக்கத்தினருக்குக் கிடைத்துள்ளது.

0 0 0

### வாலிபர்கள் ரோந்து

இரவு நரங்களில் சிலாபப்பகுதி அதிகரித்துவரும் திருட்டைத் தடுப்பதற்கு சிலாபம் முதலாளிகள் சங்கம் 15 வாலிபர்களைத் தெரிந்து பொலிசாருக்கு உதவிசெய்ய ஈடுபடுத்தியுள்ளது. இவ்வாறு பொலிசாருடன் இரவு ரோந்தில் ஈடுபடும் வாலிபர்களுக்கு முதலாளிகள் சங்கம் சம்பளம் வழங்குகிறது.

0 0 0

### 'லீட்ஞு' கடலில் மூழ்கியது

கிரேக்கக் கப்பல் ஒன்று கல்முனைக் கடலில் மூழ்கியுள்ளது. கடந்த 67-ம் ஆண்டு நவம்பர் மாதம் கல்முனைக் கடலில்கரைதட்டிய 'லீட்ஞு' என்னும் இக்கப்பலின் மேபாகம் கடந்த இருவருடங்களாகத் தெரிந்தது எனவும் தற்போது கப்பல் கடலில் மூழ்கியதால் சிறுபகுதிகள் இரண்டே தெரிவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

### ஏன் செயற்படவில்லை

மாங்குள பொலிஸ் நிலையம் செயற்படாதுஇருப்பது குறித்துப் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர். இது குறித்துப் பொலிஸ் மாஅதிபருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பிவைத்துள்ளனர். இந்த பொலிஸ் நிலையத்திற்காகஇடப் நிறுவப்பட்டுப் பலமாதங்கள் ஆவதாகவும் தெரிகிறது.

### பன்றி ஆராய்ச்சி

கடல்பன்றி பற்றிய ஆராய்ச்சியொன்று மன்னார்க்கடலில் நடைபெறவிருக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, தற்போது இலங்கையில் தங்கியுள்ள டாக்டர் கொலின்பேட்ரம் இந்த ஆராய்ச்சியை நடத்தவுள்ளார்.

விஞ்ஞான ரீதியில் நடைபெறவிருக்கும் இந்த ஆராய்ச்சிக்கான ஒழுங்குகளை மன்னார் மீன்பிடி இலாகா அதிகாரி திரு. மனு

### பஸ்விபத்தில் 6 பேர் மரணம்

சமீபத்தில் தம்புள்ளையில் இ. போ. ச. பஸ் இரண்டு மோதியதால் பஸ் சாரதி உட்பட ஆறு பேர் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்தில் படுகாயம் அடைந்துள்ள மற்றவர்கள் தம்புள்ளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் அனுராதபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸுடன் மோதியதன் காரணமாகவே இக்கோர விபத்து நிகழ்ந்தது. இவ்விபத்து சம்பந்தமாகப் பொலிசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

0 0 0

### தபாலில் 4 லட்சம் தந்திகள்

கொழும்பு பிரதம தந்திக்கந்தோரில் கடந்தவருடம் ஐயளிக்கப்பட்ட தந்திகளில் 4 லட்சம் தந்திகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாக தபால் தந்தி இலாகாவைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்: மேற்படி தந்தி கந்தோரில் தொழில் புரியும் தொழிற்சங்க வாதிகளே இதற்குக் காரணம் எனவும் அத்துடன் டெலிபிரிண்டர் இயக்குனர்களாகப் பெண்கள் நியமிக்கப்படுவதும் ஒரு காரணம் எனவும் இவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

0 0 0

### உபவானொலி நிலையம்

அரசாங்கம் பரந்தனில் உபவானொலி நிலையம் அமைப்பது என்ற தீர்மானத்தைக் கைவிட்டுள்ளது. இதற்குப்பதிலாக விரைவில் மாங்குளத்தில் இந்நிலயத்தை அமைக்க நடவடிக்கைமேற்கொள்ளப்படவிருக்கிறது. மே மாத முற்பகுதியில் இந்நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறவிருக்கின்றன என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் பிரதம பொறியியலாளரும் உபஅதிபருமான திரு. என். எஸ். விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...செய்து விட்டு திரும்பியிருக்கிறார். மேற்கு ஆசியப் பிரச்னை சம்பந்தமாக சோவியத் பிரதமர் விடுத்த எச்சரிக்கைக்கு பிரிட்டிஷ் பிரஞ்சு அரசாங்கங்கள் பதிலனுப்பியிருக்கின்றன. மேற்கு ஆசியாவில் ஐ.நா. கண்காணிப்புக் குழுவைப் பலப்படுத்த வேண்டுமென்று பிரெஞ்சு அதிபரும் மேற்கு ஆசியாவில் ஆதயுவிநியோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென பிரிட்டிஷ் பிரதமரும் தெரிவித்துள்ளனர்.

வல்லரசுகள் ஆயுத உற்பத்தியை நிறுத்தி இதர நாடுகளுக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதையும் நிறுத்திக்கொண்டால் மேற்கு ஆசியப் பிரச்னை மட்டுமல்ல உலகில் பல பிரச்னைகளுக்கு எப்படியோ சுமுகமான தீர்வு கிடைத்துவிடும். ஆனால் வல்லரசுகள் தங்கள் சுயநலத்துக்காக 'ஆபத்பாந்தவர்கள்' போல் நடித்து ஆயுதங்களை போட்டிபோட்டு விநியோகிக்கின்றன. இஸ்ரேலுக்குஅமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்கள் வழங்கவிருப்பதாகத் தெரிவித்ததும் சோவியத் யூனியனிலிருந்து எகிப்துக்கு நவீன ஆயுதங்கள் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இதே சமயம் மேற்கு ஆசியநெருக்கடிக்கு ஒரு தீர்வு காண்ப காசியாவில் யுத்தத்தை நிறுத்தி சமரசத்தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கை ஏற்பட இடம் உண்டா?

(1). இஸ்ரேலியர்கைப்பற்றிய அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறவேண்டும். (2) இஸ்ரேலை அரபுநாடுகள் அங்கீகரித்து மேற்காசியப் பிரச்னைக்கு இஸ்ரேலியரும் அராபியரும் நேரடியாகப் பேசி ஒரு தீர்வு காண வழிவகுக்கவேண்டும். (3) மேற்கு ஆசிய நாடுகளுக்கு வல்லரசுகள் ஆயுதங்கள் வழங்குவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இவைகளுக்கு வல்லரசுகளும் பிரச்னையில் சம்பந்தப்பட்ட நாடுகளும் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்யாதவரை மேற்காசிய நெருக்கடிக்குத் தீர்வுகாண்பது சுலபமல்ல. வல்லரசுகள் மேற்காசிய நெருக்கடிக்கு உண்மையிலேயே தீர்வுகாண விரும்பினுல் ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் மூன்றுவது உலகயுத்தத்திற்கு வழிவகுத்த பொறுப்பை அவைகளே ஏற்றுக் கொள்ளநேரும்.

## விவசயப்படை வீரருக்கு புதிய சம்பள விகிதம்

விஸ்வமடு, ஞாயிறு

விவசாயப்படையின் தலைமைப்பீடம் விவசாயப்படை வீரர்களுக்கு புதிய சம்பள விகிதம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அவர்கள் செய்யும் வேலைகளுக்கமைய சம்பளம் வழங்கப்படவிருக்கிறது. 'கிரூப்' வேலையில் 30கன அடிக்கு உட்பட கணக்கு காட்டுபவர்களுக்குச்சம்பளம் இல்லாமல் சாப்பாடு மட்டும் வழங்குவதென்றும், 30கன அடிக்கும் 50 கன அடிக்குமிடையில் வேலைசெய்பவர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் 1ரூபா வெட்டுவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது 50 கன அடிக்கும் 70 கன அடிக்குமிடையில் கணக்குக்காட்டுபவர்களுக்கு 50 சதம் வெட்டுவதென்றும்70 கன அடிக்கும் 100 கன அடிக்கும் இடையில் வேலைசெய்பவர்களுக்கு சாதாரண சம்பளம் வழங்குவதென்றும் 100 கனஅடிக்குக்கூடுதலாக தலா 25 கனஅடி கூடுதலாக வெட்டுபவர்களுக்கு 1 ரூபா 25 சதம் கூடுதலாகசம்பளம் வழங்குவதென்றும முடிவு செய்யப்பட்டு தற்போது இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

## ரூபா 58000 அபராதம்

கோட்டை, ஞாயிறு

கொழும்பு செட்டித்தெருவில் வசிக்கும் ஒரு நபரிடமிருந்து இரகசியப் பொலிசார் நேற்றுமுன்தினம்ரூபா 20,000 00 பெறுமதியான தங்கக் கட்டிகளை வைத்திருந்த ஒருவரைக் கண்டு பிடித்தனர்,

உதவி சுங்க அதிகாரி சந்தேகநபரை விசாரணை செய்து அவருக்கு ரூபா 58000 குற்றம் விதித்தார். தங்கக்கட்டிகளையும் சுங்கப் பகுதியினர் கைப்பற்றினர்.

ஈழநாடு பத்திரிகை லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரிமாதம்9-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

தைமாதம் 9-ம்திகதி ...ஆம்; இலங்கை மக்களின் பெருமதிப்பிற்குரிய சேர். பொன். அருணுசலம் துரை அவர்கள் தினம். அதே தினம் 1970-ம் ஆண்டு நீர்வேலிக் கிராமத்தின் சரித்திரத்திலும் ஓர் சோக தினம். நீர்வேலிக் கிராமத்தின் கல்வி, மதம், சமூக அபிவிருத்தித் துறைகளில் உழைத்த பெரியார் சங்கர பண்டிதர் முதலியார் அத்தியார் அருணுசலம் போன்ற சீரியோர்களின் வரிசைக்கு வாரிசாக அமைந்து அரும்



பெரும் பணிகள் மாண்புடன் ஆற்றிய உயர்திரு. க. வே. கனகரத்தினம் ஜே. பி. அவர்கள் மறைந்த தினம் அது அப்பெரியாரின் பூதவுடல் மறைந்தாலும் அவர் தாம் ஆற்றிய சிரிய பணிகளில், மாண்புறு தொண்டுகளில் தமக்கே உரிய அழியாப் புகழைத் தேடிக்கொண்டு எம்முன் நண்பனுய், தொண்டனுய் நல்லறம் புரிவோனுய் காட்சியளித்துக்கொண்டே இருக்கின்ருர்.

இப்பெரியார் 1921-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ம் திகதி அக்காலத்தில் கிராமத் தலைமைக்காரராகக்கடமையாற்றிய ஸ்ரீமான் கனகசபாபதி வேலுப்பிள்ளைக்கும் அவரின் மனையாள் அருணுசலம் மகள் திலகம் மாளுக்கும் சற்புத்திரனுக அவதரித்தார்.

இளம் பருவத்திலேயேதம் ஆரம்பக்கல்வியை முடித்துக் கொண்டுதொழிற்றுறையில் புகுந்தார். 1948ம் ஆண்டு வண்ணார்பண்ணையில் வாழ்ந்த ஸ்ரீமான் செல்லையா மகள் விசாலாட்சி அம்மையாரை வாழ்க்கைத்துணைவியாக ஏற்று இல்வாழ்க்கையைத் திறம்பட நடத்தத் தொடங்கினுர். அறிஞர் வியக்கும் வகையில் வாழ்ந்த இப்பெரியார் தமது கிராமத்தின் வடக்கிலும் மத்தியிலும் எழுந்தருளியுள்ள விஞயகர் ஆலயங்களுக்குப்பொதுமக்கள் உதவியுடன் பல்லாயிரம் ரூபா பணத்தைச் சேகரித்து இருபெரும் சித்திர இரதங்களை இந்திய ஸ்தபதிகளைக் கொண்டு ஆக்கிய பெருமை இவருக்கே உரியது. குறிப்பாகத் தம் குலதெய்வமாகிய ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத் திருப்பணி, தேர்த்திருப்பணி ஆகிய கைங்கரியங்கள் இவருக்கே உரிய துணிவுடன் இவரால் நிறைவேற்றப்பட்ட சாதனைகள். இவை எவரையுமே வியக்க வைக்கும் தன்மையுடையனவாகும். பொருள்வளம் படைத்த ஆலயங்களும், செல்வச் சீமான்களும் துணிந்து செய்ய முன்வர முடியாத பல அரிய பணிகளை இவர் மேற்கொண்டார். முன்னின்று ஆக்கியுள்ளார். இச்செயலை நாம் என்றும் மறக்கவோ மறைக்கவோ முடியாது, இவ்வகையில் பொறுப்புக்களை விரும்பி ஏற்றுக்கொண்டு ஆவன செய்யககூடியதிறன்படைத்தோர் அரிதிலும் அரிது. இக்கோணத்தில் வைத்து இப்பெரியாரின் திறமையைச் சிந்தித்துப் பார்க்கும்போது இவர்போன்ற இன்ஞெரு கர்மவீரன் இனிமேலும் எம் மத்தியில் தோன்றி தொண்டாற்ற முடியுமோ என்ற ஏக்கங் கலந்த எண்ணம் இவரின் மறைவால் எமக்கேற்பட்டுள்ள பெருநஷ்டத்தைப் பறைசாற்றுகின்றது,

இப்பெரியார் சமயப்பணி ஆலயப்பணிகளுடன் மாத்திரம் திருப்தியடைந்துவிடாது, மற்றும் பல வழிகளில் தம் செல்வத்தையும் செல்வாக்கையும் பிரயோகித்துச் சமூகப்பணியாற்றியுள்ளமை நாம் பலரும் அறிந்தது. இவர் தாம் கல்வி பயின்ற அத்தியார் யார் இந்துக்கல்லூரி விளையாட்டிடத்தைத் திறம்பட அமைக்கும் தொண்டிலே தம் சொந்தப் பணத்தைச் செலவழித்துள்ளார். அருகில் உள்ள நிலத்தைவாங்கி அன்பளிப்புச் செய்தமை ஒருபுறமிருக்க நீர்வேலிப் பதியின் கிராம முன்னேற்றச் சங்கத் தலைமைப்பீடத்தில் அமர்ந்து அதனை அலங்கரித்துத் தம் சொந்தப் பணத்துடன் பொதுமக்களின் உதவியும் பெற்றுத் தெருக்கள் அமைத்தல் முதலாம் சிரமதான முயற்சிகளை மிகுந்த சிரமத்துடன் பிரதமரும் எமது கோரிக்கைக்கு ஒப்புக் கொண்ட பின்னர்தான் நாம் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தோம். இதுபற்றித் தீர்மானமெடுப்பதற்கான கூட்டங்களில் கலந்துகொள் தொண்டின்மூலம் யாழ்ப்பாண மாவட்ட அதிபர் உட்படப் பலரின் போற்றுதலைப் பெற்றமையை நாம் எல்லோரும் அறிவோம். அகில இலங்கை அனுதைகளின் ஆதரவாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆயுட்கால அங்கத்தவராக இருந்த இவர் 1964 ம் ஆண்டு புயல், வெள்ளம், காரணமாகஉயிர், பொருள், வீடு இழந்து தவித்தோருக்கு ஆற்றிய தொண்டினை அக்கால வடமாநில அதிபரே புகழ்ந்து பாராட்டியுள்ளார். இத்தகைய பற்பல உயர்ந்த தொண்டினை மதித்துக் கெளரவிக்கும் முகமாகவே அரசினர் இவரை 1965-ம் ஆண்டு சமாதான நீதிபதியாக்கிக் கெளரவமளித்தனர். இம்முறையும் வடமாநில அதிபரின் வெள்ள நிவாரண ஆலோசனைககுழுவின் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு அழைப்புத் தாங்கிய கடிதம் வந்த அன்றே இப்பெரியார் இவ் உலக வாழ்வை நீத்தார். அந்தோ! இவரின் முடிவு எங்கள் சமூகத்தின் பேரிழப்பேயாம்.

இப் பெரியாரின் சேவைகள் நல்லெண்ணங்கள் புதிய நோக்குகள் பற்பல. சுருங்கககூறின் கடந்த பதினைந்து ஆண்டுகளில் திரு க. வே. கனகரத்தினம் அவர்கள் கலந்துகொள்ளாத, தொண்டாற்ருத முக்கிய சமூக, சமயப பணிகள் இல்லையென்றே கூறலாம்.

ஊரின் தொண்டனுய், உற்றவர்களின் நண்பனுய், ஏழைபங்களனுய், பலரும் 'அன்னே' என்றும், 'தம்பி' என்றும். 'ஐயா' என்றும் கூடிப் பழகிய பெருமகனை இறைவன் திடீரென மனம் பொறுக்காது தன்னகத்தே அழைத்துள்ளமை அவரின் பெருமைக்கும், சீரியவாழ்க்கைககும், தொண்டிற்கும் சான்ருகும்அமைந்துள்ளது.

'செல்வன் கழலேந்தும் செல்வம் செல்வமே' 'மக்கள் தொண்டே மகேஸ்வரன் பூசை' 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனும் குறிககோளுடன் வாழ்ந்து எம் எல்லோரதும் மதிப்பையும் பெற்ற திருவருட் செல்வர் திரு. க. வே. கனகரத்தினம் அவர்களின் ஆத்மாசாந்தி அடைவதாக.

த. ந. பஞ்சாட்சரம்,
இத் நீர்வேலி.

...வைக்கப்பட்டோம். ஆனால் எமது ஆதரவின்றி அரசாங்கம் ஆட்சி நடத்த முடியாமற் போய் விட்டது' என்ருர்.

திரு கா பொ இரத்தினம் பேசுகையில் ஒரு தொகுதியில் அதன் எம் பி இருக்கையில் வேருெரு தொகுதி எம் பி வந்து தேர்தலில் போட்டியிடுவது எந்தத் தொகுதியிலும் இதுவரை இருக்கவில்லையென்றும் தமிழரசுக் கட்சியின் தொகுதியான தீவுப்பகுதித் தொகுதி கைமாருதிருப்பதற்கே தாம் இங்கு போட்டியிடுவதாகவும் சொன்னுர்.

திரு மு ஆலாலசுந்தரம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் திருவாளர்கள் வே சுப்பிரமணியம், அ பெனடிக்ற், க அமிர்தலிங்கம், செல்வன் ரவீந்திரன் உட்படப் பலர் பேசினர். முன்னை நாள் தபாலதிபர் திரு நா சரவணமுத்து கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்

## காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறைத் தொகுதியில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் திரு. நா த சிவஞானத்தை ஆதரிக்கு முகமாக வேலணை தெற்கு ஐயனுர் சனசமூக நிலைய முன்றலில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திரு செல்வர் முருகேசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் கிளையின் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.-

...ஆராய்ச்சியை நடத்தவுள்ளார்.

விஞ்ஞான ரீதியில் நடைபெறவிருக்கும் இந்த ஆராய்ச்சிக்கான ஒழுங்குகளை மன்னுர் மீன் பிடி இலாகா அதிகாரி திரு. மனுவல் செய்துள்ளார்.

## தோட்டப் பாடசாலைகளில் சிங்களம் வேண்டும்

இரத்தினபுரி, ஞாயிறு

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்று அங்கு சிங்களம் படிப்பிக்கவேண்டும். குழந்தைகளின் கல்வியில் பெற்ருேர்களும் கவனம் செலுத்தவேண்டும் என ஐ. தொ. கா. தர்மகர்த்தாவான திரு. வி. பி. சதாசிவம் கேட்டுள்ளார்.

## இன ஒற்றுமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் உள்ள பாடசாலைகள் திருத்தியமைப்பதற்காக 9 லட்சம் ரூபா செலவு செய்துள்ள அதேவேளையில், பின் தங்கிய நிலையில்உள்ள கிளிநொச்சிப் பகுதிக்கு 3 லட்சம் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. எனது தொகுதியில்உள்ள குறைகளை நீக்கிய பின்னர் சிங்கள பாடசாலையை இங்குஅமைக்கலாம்.

வட்டக்கச்சி கிராம விஸ்தரிப்புத் திட்டத்திலுள்ள 60 மாணவர் இடவசதியின்மையால் கஷ்டப்படுவதைப் பற்றித் தங்களுக்கு ஏற்கனவே எடுத்துக் கூறியிருந்தேன். இராமநாதபுரம் மகாவித்தியாலயத்துக்கு மேலதிக கட்டிடம் தேவை எனக் கேட்டு 2 வருடங்கள் ஆகிவிட்டன. இவற்றுக்கு நடவடிக்கை எடுக்காமல் சிங்கள புதிய பாடசாலை அமைப்பது நீதி நியாயமற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

...அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறவிருக்கின்றன என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் பிரதம பொறியியலாளரும் உபஅதிபருமான திரு. என். எஸ். விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

## விபத்தில் சிக்கிய வீரருக்கு பதவி உயர்வு

விஸ்வமடு, ஞாயிறு

விபத்தில் சிக்கி, வலது கால் முறிந்து யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் விஸ்வமடு விவசாயப்படை வீரர் பாலசுப்பிரமணியம் என்பவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

விவசாயப் படைக்குச் சொந்தமான வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது இவர் விபத்தில் சிக்கினுர். இம்மாதம் 5ந் திகதி முதல் இவர் களஞ்சிய உதவிப் பொறுப்பதிகாரியாக அதே முகாமில் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

## புதிய வழக்கறிஞர்

வெள்ளவத்தை, ஞாயிறு

திரு. கந்தையா நீலகண்டன் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் கரணவாய்தெற்கைச் சேர்ந்த திரு ஏ வி. கந்தையா, காலஞ்சென்ற திருமதி சின்னத்தங்கம் கந்தையா தம்பதிகளின்புதல்வராவர்.

சட்டக் கல்லூரியில் பயின்றபோது இந்து மகாசபைத்தலைவராகவும் தமிழ் மன்றத் துணைச்செயலாளராகவும் இருந்தார். இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகிய வற்றின் பழைய மாணவராவார்.

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு விஷேச காட்சிகள்
ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதால் தொடர்ந்து
காட்சியளிக்கும்

# ஒளவையார்

வின்ஸரில்

தினசரி 4 காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org